

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

ஸ்ரீ விளம்பி தை - மாசி
பிப்ரவரி - 2019

மலர் 8 இதழ் 2

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 8 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| Vedantic Prayer | 10 |
| அனுக்கிரஹ பாஷணம் | 11 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ராம நாமத்தின் மகிமை | 13 |
| திருக்குறள் நூற்றெட்டு | 15 |
| இராமாவதாரம் எதற்காக | 17 |
| ஸத் விஷய ஸங்கரஹம் | 19 |
| தமிழ் பாகவதம் | 20 |
| ஸ்ரீ மடத்துச் செய்திகள் | 22 |
| மகாபெரியவாவின் அறிவுரை | 25 |
| வேத மந்த்ரார்த்தங்கள் | 27 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 10 | 29 |
| வால்மீகி பிரதீபம் - 48 | 30 |
| மாசி மாத விசேஷ தினங்கள் | 32 |
| மஹா பெரியவாவின் திருவிளையாடல் | 32 |
| புராணக்கதை | 33 |
| வேதாந்த ஸாரம் | 35 |
| ஸபா ரஞ்ஜன சதகம் | 37 |
| பாராயண பக்கம் | 39 |
| ஆதிசங்கரர் அருளிய த்ரிபுரஸுந்தரீ வேதபாதஸ்தவம் | 42 |
| பித்ரார்ஜிதம் | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| பாப புண்யங்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


### நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோஶஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

*மின் அஞ்சல் :*
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

பாரத நாடு பழம்பெரும் நாடு. நீரதன் புதல்வர். இந்நினைவகற்றாதீர்

என்பது பாரதியார் வசனம். இந்த நாட்டில் காஞ்சீ மண்டலம் தெய்வத்தன்மை வாயந்த ப்ரதேசம். எழு மோக்ஷபுரீகளில் இது முக்யமானது. இதற்கு தொண்டை மண்டலம் என்ற பெயர் ப்ரசித்தி பெற்றது. பாலாறாலும் தென்பெண்ணையாறாலும் சூழப்பட்டது.

நகரேஷு காஞ்சீ என்ற பெயர்பெற்றதும் காமாக்ஷியின் அருளைப் பெற்றதுமாக ஒட்யாணபீடமாய் விளங்கி வருகிறது. இந்த க்ஷேத்ரம் எத்தனை புலவர்களை எத்தனை மகான்களை தந்திருக்கிறது. ஒரு பெரிய நூலே எழுதிவிடலாம். அப்பேர்பட்ட க்ஷேத்ரத்தில் காமகோடி வம்சத்தில் சுமார் 200 வருடங்களுக்குமுன் ஓர் அவதாரம் நிகழ்ந்தது. அதுதான் அவதூதராய் 40 வருடங்கள் வாழ்ந்து அத்புதங்கள் நிகழ்த்தி மறைந்த ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள்அவதாரம். பிறந்தபோதே அத்புதம் நிகழ்த்தி ''தங்கக்கை'' பையன் எனும் பெயர்பெற்றவர். பரமஞ்யானியாய் அவதூதராய் சஞ்சாரம் செய்து அத்புதங்கள் நிகழ்த்தினவர்.

அத்புதங்கள் நிகழ்த்தவேண்டும் என்று அவர் ஸங்கல்பிக்கவில்லை. அவை தானாகவே நிகழ்ந்தன. இப்படியிருந்து கொண்டே திருவண்ணாமலை சென்று அங்கேயே இறுதிவரை பாலனைப்போலும் பித்தனைப்போலும் உபனிஷத் சொல்லுக்கேற்ப வாழ்ந்தவர். ''காமோகார்ஷீத்'' எனும் வேதமந்தரத்தின் நுணுக்கம் அறிந்தவர். நிறைய பேருக்கு மந்த்ரோபதேசம் செய்தவர். ஆனந்த நிலையிலேயே எப்போதும் திளைத்தவர். எப்போதும் ப்ரம்மானந்தமே.

''சாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ வஸந்தவத்லோகஹிதம் சரந்த:
தீர்ணா ஸ்வயம் பீமபவார்ணவம் ஜனான் அஹேதுனான்யபிச தாரயந்த:''।।

விவேக சூடாமணியில் ஸ்ரீசங்கரர் கூறியபடி ஜீவன்முக்தராகிய குரு வசந்தகாலம் போல் அனைத்துமக்களுக்கும் ஹிதம் செய்தவர். மகாபெரியவாளும் நான் எப்போது அவர்போல் ஆவேன் என்று கூறியது உண்டு. (பெரிவாளே ஜீவன்முக்தர்)

காஞ்சி தந்த செல்வம் திருவண்ணமலையில் முக்தியடைந்தது. அவரைப் போற்றும் வகையில் மகாபெரியவா அவருடைய வீட்டைக் கண்டுபிடித்து ட்ரஸ்ட் ஒன்று அமைத்து வருடவருடம் ஹஸ்த நக்ஷத்ரத்தில் ஜயந்தியையும், ஆராதனையும் செய்ய ஆணையிட்டார். இன்றளவும் வரதராஜ ஸன்னிதிக்கு அருகில் மிக விமர்சையாக நடைபெறுகிறது. காஞ்சி தந்த அந்த அவதூதரின் மலரடி பணிவோம் முக்தி பெறுவோம்.

# காஞ்சி தந்த பண்டிதர்

கல்விக்கரையில்லா காஞ்சி என்று புகழ்பெற்ற நகரம் நிறைய மகான்களைத் தோற்றுவித்தபெருமை உடைத்து. சுமார் 200 வருடங்களுக்கு முன் ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளைத்தந்த நகரம் 750 வருடங்களுக்குமுன் வைஷ்ணவ மகா பண்டிதர் ஒருவரைத் தந்தது.

அவர்தான் வேதாந்த தேசிகர் என்று பெயர்பெற்ற வேங்கட நாதர் என்பவர். காஞ்சியில் தூப்புல் எனுமிடத்தில் (ஆலடிப்பிள்ளையார் கோயில் அருகில்) அவதரித்தவர். சிறுவயதிலேயே கல்விகேள்விகளில் அபார புலமை பெற்றவர். அடிப்படை சாஸ்த்ரங்களைக் கற்றுத் தேர்ந்தவர். ஹயக்ரீவரின் அருள்பெற்றவர். எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர். தினமும் உஞ்சவ்ருத்தி எடுத்து வாழ்ந்தவர். அவர் செய்தருளிய க்ரந்தங்கள் எண்ணிலடங்கா.

அவைகளை ஒரு பார்வை பார்ப்போம். 28 பக்திக்ரந்தங்கள், 24 உரைகள் 11 தத்வ வ்யாக்யானங்கள், 3 மகாகாவ்யங்கள், 1 நாடகம், 10 பாஷ்யங்கள் இப்படிப் பல. ஹயக்ரீவ ஸ்துதி, அச்யுதசதகம், அபீதிஸ்தவம், தயாசதகம், தசாவதார ஸ்தோத்ரம், ஸ்ரீ ஸ்துதி, ஸங்கல்ப ஸூர்யோதயம் யாதவாப்ய்தயம், பாதுகா ஸஹஸ்ரம், ஹம்ச ஸந்தேசம் போன்றவை ப்ரஸித்திப் பெற்றவை. அப்பய்ய தீக்ஷிதர் யாதவாப்யுதம் காவ்யத்திற்கு உரை எழுதி அவரைக் கீழ்கண்டவாறு ஸ்லாகிக்கிறார்.

''கவிதார்க்கிகஸிம்மருடைய காவ்யங்களில் பாவ
ரஸம் ஒவ்வொரு பதத்திலும் மிளிர்கிறது''

இதுமட்டுமல்லாமல் கட்டடக்கலை, ஆஹாரவிதி, பூக்கோளவர்னனை, கணிதம் இவைகளிலும் வல்லவராயிருந்தார். அதனாலேயே ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்று அழைக்கப்பட்டார். கணிதத்தில் இவரது புலமையைச் சற்று விளக்குவோம். Chess என்று சொல்லப்படும் சதுரங்க ஆட்டத்தில் KINGS TOUR ''ராஜாவின் கதி''என்று ஒரு புதிர் உண்டு. அதை விடுவித்தவர் யூலர் எனும் ஐரோப்பிய கணிதவியலார். ஆனால்

அதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னால் தன்னுடைய பாதுகா ஸஹஸ்ர காவ்யத்தில் சதுரங்கதுரங்க பந்தம் எனும் சித்ரக்கவியினால் சாதுர்யமாக கணித ரீதியாக ஆழமாக அதைத் தீர்த்துவைத்துள்ளார். ஆச்சர்யமான விஷயம்.

ஸ்ரீராமனுஜருக்குப்பின் வைஷ்ணவத்தை நிலை நாட்டினார் இவர். இன்றும் வரதராஜபெருமாளுடைய உற்சவம் இவராலேயே பூர்த்தி அடைகிறது என்பது அவரது

பெருமையை பறைசாற்றும். வரத ராஜனே என் பெரும் செல்வம் என்றவர். நகரேஷு காஞ்சீ எனும் பெயர் பெற்ற அன்னகரம் தந்த இரண்டு மகான்களை வணங்குவது நம் கடமை என்று கூறி அதே நகரம் தந்த ஆசார்யரின் பொற்பாதத்தில் இவ்விதழை ஸமர்ப்பிக்கிறோம்.

## ஒரு விளக்கம்

ஸ்ரீஸுந்தரம் என்பவர் ஆகஸ்ட் இதழில் வந்த பித்ரார்ஜிதம் கட்டுரையில் புராணங்கள் கற்பனை கலந்தவை என்று கூறப்பட்டுள்ளதே ஏன் என்று கேட்டார். அதற்கு அல்பஸ்ருதன் விளக்கம்.

இதிஹாசம் சரித்ரமாகும். புராணக்கதைகள் கற்பனை கலந்துதான் இருக்கும். மீமாம்சத்தில் ஆறு தாத்பர்ய நிர்ணயங்கள் உள்ளன. அவைமூலமாக பொருள் அறியவேண்டும். அதில் ''அர்த்தவாதம்'' என்று ஒன்று உண்டு. கதைகள் வரும்போது அவைகளைத் தள்ளி விட்டு தத்வத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். பெரிய தத்வம் எல்லாருக்கும் புரியாது. பாமரர்களுக்கு புரிய கதைகள் தேவை.

ஸனாதனமதத்தின் அடிப்படையே இதுதான்கற்பனை ஆனாலும் கருத்துள்ளதே. மேலும் விளக்கம்பெற தெய்வத்தின் குரல் இரண்டாம்பாகம் பார்க்க

## பரமாச்சாரியரின் பொன்மொழிகள்

பிராம்மணனின் தேகம் இந்திரிய சுகத்துக்காக ஏற்பட்டதே அல்ல. அது உலக க்ஷேமத்துக்கா வேதத்தை ரக்ஷிப்பதற்கு என்ன நியமங்களை, அனுஷ்டானங்களைப் பின்பற்ற வேண்டுமோ அவற்றைச் செய்யவே ஏற்பட்டது. அதில் அதிகப்படியான எந்த போக்ய வஸ்துவும் சேர்க்கக்கூடாது என்பதே அடிப்படை தர்மம். அந்த தர்மத்தை, அதில் உள்ள தியாகப் பண்பை விட்டு விட்டு நவீன உபகரணங்களால் சுலபத்தில் கிடைக்கிற சுகங்களக்கு இவன் ஆசைப்பட்டது அடியோடு தவறுதான்.



# கீதை பிறந்தது எதற்காக?

## பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



ஆதிசங்கராசாரியார் அவர்கள் பகவத் கீதையின் முக்கிய நோக்கம் ஞான நிஷ்டையே என்கிறார் பால கங்காதர திலகர். இவ்விஷயத்தில் ஆதிசங்கராசார்ய சுவாமிகள் எழுதியிருக்கும் அபிப்பிராயத்தை மறுக்கிறார். கீதை என்னும் நூலில் சொல்லப்பட்ட முக்கிய விஷயம் யுத்தம் என்னும் கர்மயோகமே என்றும், அதற்கங்கமாக ஞானம் முதலியவை சொல்லப்பட்டிருக்கலாமே ஒழிய இந்நூல் ஞான திருஷ்டியை ப்ரதானமாகச் சொல்ல வந்ததன்று எனவும் அவர் விரிவாகவாதித்திருக்கிறார். திலகர் மகாராஷ்ட்ர தேசத்தில் அத்வைத மதத்தைச் சார்ந்த ஸ்மார்த்த குலத்தவர். ஆதலால் ஆதி சங்கராசாரியரைப் பின்பற்றும் மரபைச் சார்ந்தவர். அவர் இவ்விதம் ஆசாரிய சுவாமிகளின் கீதா பாஷ்யத்திற்கு மாறுபட்ட கொள்கையைக் கொண்டதைத் தெரிந்து மத்வாசாரியர் ஒருவர் அவரையணுகி, "நீங்கள் சங்கராசாரிய பாஷ்யத்தினின்றும், மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டால் அவருடைய மதத்தை விட்டு எங்களுடைய த்வைதமதமான மத்வ மதத்தைச் சேருங்கள்" என்று கேட்டுக் கொண்டாராம். அதற்கு திலகர் சொன்னதாவது, "வேதங்களுக்கோ மற்ற சாஸ்திரங்களுக்கோ அத்வைதத்திலேயே முக்கிய தாத்பர்யம் என்னும் உண்மையை நான் மறுக்க வரவில்லை. பகவத் கீதையின் முக்கிய தாத்பர்யம் கர்மயோகம் என்பதொன்றே என்வாதம். மனு தர்ம சாஸ்த்ரத்திற்கு தர்மானுஷ்டானத்திலேயே முக்கிய தாத்பர்யம். சூரிய சித்தாந்தத்திற்கு ஜோதிஷத்திலேயே முக்கிய தாத்பர்யம். சரகஸம்ஹிதைக்கு வைத்தியத்திலேயே முக்கிய தாத்பர்யம். அதுபோல் கீதைக்கு கர்ம யோகத்திலே முக்கிய தாத்பர்யம். உபநிஷத்துக்களுக்கு அத்வைத ஞான நிஷ்டையிலேயே தாத்பர்யம் என்பதை நான் ஆக்ஷேபிக்கவில்லை. உபநிஷத்துக்களுக்கு த்வைதத்திலே தாத்பர்யம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தால் அப்போது தான் நீங்கள் என்னை மதமாற்றம் செய்யலாம். அதற்கு என்னிடம் இடமில்லை" என்று பதில் கூறிவிட்டாராம்.

இவ்வபிப்பிராய பேதங்களொருபுறமிருக்கட்டும். கீதையின் முக்கிய தாத்பர்யத்தை நிர்ணயிப்பதற்கு சர்வ சம்மதமான ஒரு வழி உண்டா? கீதையைப் பற்றி மாத்திரமல்லாம் எந்த நூலின் தாத்பர்யத்தையும் நிர்ணயிக்க ஒரு வழியுண்டா?

அரசாங்கத்தில் சட்டமியற்றுகிறார்கள். அச்சட்டங்களின் கருத்தை நிர்ணயிப்பதில் சட்ட நிபுணர்களுக்குச் சில சமயம் அபிப்ராயபேதமுண்டாகி விடுகிறது. சட்டங்களின் அபிப்ராயங்களை நிர்ணயிப்பதற்காகவே சில பொது விதிகளை ஒப்புக் கொள்ள வேண்டி வருகிறது. அப்போது விதிகளை ஆதாரமாக் கொண்டே நமது நீதிமன்றங்களில் சட்டங்களின் கருத்துக்களை நிர்ணயிக்கிறார்கள். இதைப் போலவே வேதமென்னும் சாசுவதமான சட்ட வாக்கியங்களின் தாத்பர்யத்தை நிர்ணயிப்பதற்காக ஆயிரம் அதி கரணம் அல்லது அத்தியாயங்கள் கொண்டு மீமாம்சை என்னும் சாஸ்திரத்தை ஜைமினி மகரிஷி இயற்றிருக்கிறார். அம்மீமாம்சா சாஸ்திரத்தில் வேதங்களினின்றும் ஆயிரமிடங்கள் உதாரணமாக எடுத்துக் கொண்டு அவ்விடங்களிலுள்ள வாக்கியங்களுக்குத் தாத்பர்யத்தை நிர்ணயிப்பதில் எத்தனை விதமான முறைகளை ஆலோசிக்கலாமோ அத்தனை விதமான முறைகளை ஆலோசித்து அவைகளை நன்றாய் அலசி விசாரித்து முடிவான முறைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அம்முறைகளுக்கெல்லாம் ஆறு தத்வங்கள் ஆதாரமாக நிற்கின்றன. அவைகளுக்கு தாத்பர்ய லிங்கங்கள் என்பது சாஸ்திரத்தில் வழங்கும் பெயர். ஷட்சித தாத்பர்ய லிங்கங்களே ஒரு நூலின் கருத்தை நிர்ணயிப்பதில் அஸ்திவாரங்களாக விருப்பன. சாஸ்திர வழக்கப்படி அவைகளின் பெயர்கள் பின்வருமாறு : உபக்ரமோபஸம், ஹாரௌ அப்பியாஸ: - அபூர்வதா - பலம், அர்த்தாவாத: - உபபத்தி: என்பன.

உபக்ர மோப ஸம்ஹாராவப்பியாஸோ - பூர்வதா - பலம்
அர்த்தவாதோ - பபத்தி - லிங்கம் தாத்பர்ய நிர்ணயே

ஒரு நூலிற்கு மாத்திரமல்ல. ஒருவர் ஒரு உபன்யாசம் செய்து கொண்டே போகிறார். அவ்வுபன்யாசம் எதைப்பற்றி என்பதை விளக்கும் ப்ரசுரம் நம் கையில் கிடைக்கவில்லை. அதைப்பற்றி நாம் ஒருவரையும் விசாரிக்கவுமில்லை. உபன்யாசம் எதைப்பற்றியது என்று நாம் எப்படி நிர்ணயிக்கலாம்? உபன்யாசகரோ ஊர்க்கதைகளையெல்லாம் சுற்றிக் கொண்டே போகிறார். நமக்கு உபன்யாச விஷயத்தைத் தெரிந்து கொண்டாக வேண்டும் என்ற ஊக்கமிருக்கிறது. அத்தருணத்தில் நாம் கையாளும் முறைகளே மீமாம்சா சாஸ்திரத்தில் தாத்பர்ய லிங்கங்கள் என்று சொல்லப்படுகின்றன. அவைகள் இயற்கை முறைகளே. வேதத்திற்கு மாத்திரம் உபயோகப்படுமென்பதல்ல. எந்த நூலிற்கும் எந்த ப்ரசங்கத்திற்கும் இவைகளைக் கையாண்டு நிர்ணயத்தைக் காணலாம். ஆரம்பமும், முடிவும் ஒரே விஷயமாகவிருத்தல், அதாவது உபக்ரம உபஸம்ஹார ஏகரூபம், ஒரு தாத்பர்ய லிங்கமென்று சொல்லப்பட்டது.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### இதிகாச சகோதரர்கள்



அடுத்ததாகக் கும்ப கர்ணன், கும்பகர்ணன் எப்பொழுதும் தூங்கிக் கொண்டே இருப்பான். ஒரு சமயம் எழுந்திருக்கிறான். எழுந்து அவன் கூட அண்ணனான ராவணனைப் பார்த்துச் சொல்கிறான்.

"அண்ணா நீ செய்வது சரியல்ல... சீதையை விட்டு விடு. அப்போதுதான் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கலாம். இல்லாவிட்டால் நாமெல்லாம் செத்துப் போய்விடுவோம்" என்று உயிருக்குப் பயந்தாவது நல்ல வார்த்தை சொல்லுகிறான். தூங்கி எழுந்தாலும் நல்ல வார்த்தை பேசிவிட்டுத்தான் மறுபடியும், தூங்கப் போகிறான் கும்பகர்ணன். அதைக்கூடக் கேட்கவில்லை ராவணன். "என்னுடைய சுபாவத்தை யாராலும் மாற்ற முடியாது" என்றான். கும்பகர்ணன், விபீஷணன் எல்லோரும் சொல்லும் போதும் அவனுடைய மனைவிமார், மக்கள்மார் எல்லோரும் சொல்லும்போதும் கூட முன்வைத்த காலைப்பின் வைக்க மாட்டேன் என்று பிடிவாதமாக ராமனோடு யுத்தம் செய்து, அவன் மடிகிறான். அவரோடு கூட கும்பகர்ணன் சேர்ந்து போய், தமோகுணம் பிரதானமாக உள்ள அவனும் இணைகிறான். மடிந்து போய் விடுகிறான். ஆகவே, கும்பகர்ணன் போல் எப்போதும் தூங்கிக் கொண்டே இருப்பதோ, சோம்பேறித்தனமாக இருப்பதோ கூடாது. ராவணன் போலும் இருக்கக் கூடாது. பின் எப்படி வாழ்க்கையில் இருக்க வேண்டும்? எப்படிப்பட்ட குணத்தோடு வாழ்க்கையை நடத்த வேண்டும்? விபீஷணன் போல் இருக்க வேண்டும். விபீஷணன் சத்வ குணம் பிரதானமாக இருந்தவன். எப்பொழுதும் விஷ்ணு பக்தி செய்பவன். சாத்வீகமான சுபாவம் உள்ளவன். தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பவன். சரியாக இல்லாவிட்டால் எங்கே நல்லது இருக்குமோ, அங்கே போய்விடுவான். தீயவர்களோடு சேர்ந்தால் எங்கே நம்முடைய மனம் மாறிவிடுமோ என்று பயந்து, நல்லது எது எங்கே இருக்குமோ அங்கே வந்துவிடுவான். அப்படிப்பட்டவன் விபீஷணன்.

அதனால்தான் இன்றைக்கும் அவன் சிரஞ்சீவிகளின் பட்டியலிலே

வந்திருக்கிறான். அஸ்வத்தாமா பலிர் வ்யாசஹ, ஹனுமான்ஞ்ச விபீஷண, என்று வந்திருக்கிறது. அப்படி அண்ணன், தம்பி மூன்று பேர்களிலே சிரஞ்சீவிகளாய் இருக்கக் கூடியவர்களின் பட்டியலிலே விபீஷணன் மட்டும் வந்தான் என்றால், அவன் ராமனுடைய அடிக்குப் பயந்தோ, யுத்தத்துக்கு பயந்தோ, காட்டிக் கொடுத்து விட்டு நாம் தப்பித்துக் கொள்வோமே என்றோ வரவில்லை. நிஜமாக சத்வ குணம் எங்கே இருக்கிறதோ, நல்லவர் எங்கே இருக்கிறாரோ, தர்மம் எங்கே இருந்ததோ, நியாயம் எங்கே இருந்ததோ அங்கே போக வேண்டும் என்பதற்காகத்தான் ராமனுடன் வந்து சேர்ந்து கொண்டான். ஆகவே நாமும்கூட, நல்லது எங்கே இருக்கிறதோ அங்கே சேர வேண்டுமே தவிர, சொந்த அண்ணனாய் இருந்தாலும், தம்பியாய் இருந்தாலும்,பெற்றோர்களாய் இருந்தாலும், நல்லது எங்கே இருக்கிறதோ அதை விட்டுவிட வேண்டாம் என்பதற்கு விபீஷணன் ஒரு எடுத்துக்காட்டு.

நல்லவருக்கு - ராமருக்கு - குரங்குகளெல்லாம் கூட உதவி செய்கின்றன.தீயவனான ராவணனுக்கும், கும்பகர்ணனுக்கும் சொந்தத் தம்பி கூட உதவி செய்யவில்லை. இதைத்தான் நாம் வாழ்க்கையிலே புரிந்து கொண்டு, நல்லவர்களுடன் வாழ்க்கை நடத்த வேண்டும். தீயவர்களுடன் வாழ்க்கை நடத்தக்கூடாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## ஸனாதன தர்மப்புதிர்கள் பிப்ரவரி வினாக்கள்

1. பொன்முட்டை என்று வேதம் கூறும் இவர் யார்?
2. கோயில்களில் தீபம் எத்தனை வகைப்படும்?
3. மருந்துச்செடிகள் வளர இக்க்ரகத்தின் ஒளி தேவை
4. கும்பாபிஷேகம் எத்தனை வகை?
5. க்ருஷ்ணா நதியின் உத்பத்திஸ்தானம்
6. அப்பைய்ய தீக்ஷிதர் உரை எழுதிய வைஷ்ணவ ஆசார்யரின் காவ்யம்
7. அம்பாளின் ஸேதுபீடம்
8. அம்மன் நெருப்பாக இருக்கும் இடம்
9. கவிதார்க்கஸிம்மம் என்று அழைக்கபடுபவர்
10. தமிழ் நாட்டில் உள்ள ஜ்யோதிர்லிங்கம்.

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஜனவரி விடைகள்

1. திருமியச்சூர்
2. கேன உபனிஷத்தில் காக்ஷிதரும் அம்பாள்
3. நான்கு வகை
4. திருவையாறு
5. காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது
6. சனைச்சரன்
7. அதர்வண வேதத்தில்
8. ப்ரம்மகிரி மகாராஷ்ட்ர மானிலம்
9. கூஹு எனும் கந்தர்வன்
10. கார்த்திகை முதல் தேதி

# VEDANTIC PRAYER

## SRUTIGITA

द्यूपतय एव ते न ययरन्तमनन्ततया
त्वमापि यदन्तराऽण्डनिचया ननु सावरणा : ।
स्वं एव रजांसि वान्ति वयसा सह यच्छ्र्द्र तय –
स्वयि हि फलन्यतन्निरसनेन भवन्निधन: ।। २९


द्यु पतय एव (चपि) even the lords or rulers of heavenly regions ते your व्यन्तं final or real nature न ययु: do not know (lit.reach) ऋनन्ततया being infinite त्वं ऋपि You, too यदन्तराण्डनिचया सावरंणा: are enveloped and conditioned by the universes contained within. (You) ननु is it not? खे इव as in the sky रर्जासि sand particles वन्ति whirls वयसा सह along with the movements of Time यत् because श्रुतय: (चपि) even the Vedas त्वयि in You फलन्ति end or fructify हि therefore ऋतत् – सिरसनेन by negating all which are not the atma भवन् निधना: You are (alone) indicated or implied.

29. *dyupataya eva te na yayur antam*
*anantataya*
*tvam api yad-antaranda - nicaya*
*nanu savaranah*
*kha iva rajamsi vanti vayasa saha*
*yacchrutayah*
*tvayi hi phalantyatan - nirasanena*
*bhavannidhanah*

O Lord, even the masters of the celestial regions do not understand Your glory, because of Your infinite nature. Being eternal, You are beyond the range of words and speech. Vast and wonderful is Your universe! With the passage of time, manifold universe! with the passage of time, manifold universes, conditioned by cause and effect and covered with the seven sheaths, whirl like particles of dust in the vast firmament - but all this takes place within You infinite bosom. You are indescribable. Even the Vedas which are the authority on spiritual truths only indicate Your glory - and that faintly - by denying what You are not. You, indeed are the fruition, the end, of the Vedas.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ ஸங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



சென்னை துரைப்பாக்கத்தைச் சார்ந்த சங்கரா பள்ளிக்கூட மாணவர் மற்றும் மாணவியர்கள் ஆகிய நீங்கள் எழுதக் கூடிய பொதுத் தேர்வுகளையொட்டி, இங்கு காஞ்சீபுரத்திலே பெரியவர்களுடைய ஆசியை பெறுவதற்காக வந்திருக்கிறீர்கள்.

இந்த காஞ்சீபுரமானது பழங் காலத்திலிருந்தே கல்விக்கு முக்கியமான ஊராக, education centre ஆக விளங்கி வருகிறது. காஞ்சிபுரத்திற்கு பல சிறப்புகள் இருக்கின்றன. அந்த சிறப்புகளிலே, பக்திக்கு முக்கியமான ஊர் காஞ்சிபுரம். அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும் அன்னை காமாக்ஷி உமையே , என்பதாக, காஞ்சிபும் காமாட்சி அம்மனின் ஊர்.

அதேபோன்று, கட்டிடக்கலை. இந்தக் கட்டிடத்தை ஒரு மாதிரியாகக் கட்டி இருக்கிறார்கள். அறுபது, எழுவது வருஷங்களுக்கு முன்பு, கிராமங்களிலே ஓட்டு வீடுகளைக் கட்டினார்கள். அதற்கு முன்பாக, வேறு விதத்திலே கட்டி இருப்பார்கள். ஆயிரம் வருஷம் முன்பாகக் கட்டப்பட்ட கோவில்கள் கூட இங்கு உள்ளன.

நரசிம்ஹ வர்மன் என்ற பல்லவ ராஜா காலத்திலே கட்டப்பட்ட கைலாசநாதர் கோவில், இந்த ஊரிலே இருக்கிறது. அது போன்று வைகுந்தப் பெருமாள் கோவில் இருக்கிறது. இன்னும் பல கோவில்கள் இருக்கின்றன. தொல்பொருள் இலாக்கா (Archaelogical Survey of India) பொறுப்பிலே, பல கோவில்கள் இருக்கின்றன.

எங்கிருந்தோ கல்லை எடுத்துக் கொண்டு வந்து கோவில் கட்டியிருக்கிறார்கள். அதேபோல் ஓவியம். பல நூறு வருஷங்களாக அழியாத ஓவியங்கள். அந்த காலத்திலே ஓவியத்திற்கு வேண்டிய மூலப் பொருளை, இலைகள் மூலமாக, செடிகள் மூலமாக தயார் செய்து, natural இயற்கை வழியாகத் தயார் செய்து ஓவியங்கள் வரையப்பட்டு இருக்கின்றன.

தஞ்சாவூர் பெருவுடையார் கோவில், ப்ரஹதீஸ்வரர் கோவில் -தஞ்சை பெருவுடையார், ப்ரஹ¬நாயகி, அந்தக் கோவிலிலே ஓவியம் எப்படி சிறப்பாக இருக்கிறதோ, அதே போன்று, காஞ்சிபுரத்திலேயும் ஓவியங்கள் கிடைக்கின்றன. கட்டிடக் கலை. ஓவியம், இன்னும் பல கலைகள், அறுபத்தி நான்கு கலைகள், ஞாபக சக்திக்காக ஒரு கலை, ஒரே சமயத்திலே, நாம் ஒரு காட்சியைப் பார்க்கலாம். ஒரு கச்சேரியைக் கேட்கலாம். பாடங்களைக் கேட்கலாம்.

ஒரே சமயத்திலே ஐந்தாறு விஷயங்கள் நடக்கும் போது ஒரு இடத்திலே பேசிக் கொண்டு இருக்கிறார்கள், ஒரு இடத்திலே நடனம் நடந்து கொண்டு இருக்கிறது. இன்னொரு இடத்திலே சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இப்படி பலதரபட்ட நிகழ்ச்சிகள் ஒரு இடத்திலே நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போது, அனைத்தையும் பார்த்து கவனம் வைத்துக் கொள்வது, ஒரு சமயத்திலே எட்டு நிகழ்ச்சிகள். சேர்ந்தாற்போல், ஒரே சமயத்திலோ அல்லது தொடர்ந்தார்ப்போல், ஐந்து நிமிஷம் இடைவெளியிலே, பத்து நிமிஷம் இடைவெளியிலே, இப்படி நடக்கும் பொது, ஒரு சமயத்திலே மூன்று நிகழ்ச்சிகள், ஒரு சமயத்திலே ஐந்து நிகழ்ச்சிகள், இப்படி இருக்கும் போது,துல்லியமாக கவனித்தல், சரியாக கணித்தல் , சரியாகக் calculate பண்ணுவது, அதற்குரிய கல்வி, அஷ்டாவதானம் என்பதாகக் பெயர். அஷ்டா என்றால் எட்டு. அவதானம் என்றால் கவனித்தல். கூர்மையாகக் கவனித்தல். ஒரு பொருளையே நாம் ஒரு இடத்தில் வைத்து விட்டு, சில சமயம் மறதிக்கு ஆட்பட்டு, மறந்து விடுகிறோம். இப்படி இருக்கக் கூடிய சூழ்நிலைகளில், அந்தக் காலத்திலே, காஞ்சிபுரத்திலே, 64 கலைகளை சொல்லிக் கொடுத்தார்கள்.

அது விளையாட்டுக் கலையாக இருக்கட்டும், concentration அதற்கு உரிய பயிற்சியாகக் இருக்கட்டும். தற்போது உங்களுக்கும் அளிக்கிறார்கள். கணக்கு சம்பந்தமாக, ஞாபக சக்திக்காக, எதோ சில பயிற்சிகளை எல்லாம் அளிக்கிறார்கள். கணக்கிலே சிறந்து விளங்குவதற்காக.

இப்படி பல கலைகள். விளையாட்டிலும் சிறந்து விளங்கினார்கள். அந்த காலத்துக் கலையின் நயம் பற்றி கூறவேண்டுமானால், தர்மபுரி, கிருஷ்ணகிரி பக்கத்திலே, ஒரு கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலிலே, தூணுக்கு கீழாக, சின்னத் துணியை விட்டு எடுக்கலாம். ஒரு சின்னத்தூண் இருக்கும். அதற்க்கு கீழே ஒரு பேப்பர் வைத்தால். அதை வெளியே எடுக்கலாம். அதே போல், காஞ்சிபுரத்திலே, கருங்கல்லினால் ஆன சங்கிலி இருக்கிறது. (chain) பெருமாள் கோவிலிலே, வரதராஜ சுவாமி கோவிலிலே அமைந்து இருக்கிறது.

(தொடரும்)

# ராம நாமத்தின் மகிமை



தினமும் காலை நாராயண நாமத்தையும், இரவில் தூங்கும் முன், சிவ நாமத்தையும் சொல்லுங்கள்...' என, கூறியிருக்கிறார் காஞ்சி ஸ்ரீ மகா சுவாமிகள்.

மிக எளிய வழிபாடு தான்; ஆனால், நம்மில் எத்தனை பேர் இதை கடைபிடிக்கின்றனர். இறைவனின் நாமத்தை உச்சரிப்பதன் மகிமையைப் பற்றிய கதை இது:

பஜனை கோஷ்டி ஒன்று, வீதியில் நாம சங்கீர்த்தனம் பாடியபடி சென்று கொண்டிருந்தது. அதை, அலட்சியம் செய்த ஒருவனுக்கு, ராம நாமத்தை உபதேசித்த ஞானி ஒருவர், 'இதை, விற்காதே; ஆத்மார்த்தமாக ஒரே ஒரு முறையாவது சொல்லிப் பார்...' என்றார்.

அவனும் அப்படியே செய்தான்.

காலகிரமத்தில் இறந்து போனான். அவன் ஆத்மாவை இழுத்துப் போய், யமதர்மராஜன் முன் நிறுத்தினர். அவரும், அவனுடைய பாப, புண்ணிய கணக்கை பரிசீலித்து, 'ஒருமுறை ராம நாமத்தை சொல்லி இருக்கிறாய்; அதற்காக, என்ன வேண்டுமோ கேள்...' என்றார்.

ராம நாமத்தை உபதேசித்த ஞானி, 'அதை விற்காதே...' என்று கூறியிருந்தது நினைவுக்கு வந்தது. அதனால், அதற்கு விலை கூற மறுத்து, 'ராம நாமத்திற்கு, நீங்கள் என்ன தர வேண்டுமென நினைக்கிறீர்களோ, அதைத் தாருங்கள்...' என்றான்.

திகைத்த யமதர்ம ராஜா, 'ராம நாமத்திற்கு, நாம் எப்படி மதிப்பு போடுவது...' என்று எண்ணி, 'இந்திரன் தான் இதை தீர்மானிக்க வேண்டும்; வா இந்திரனிடம் போகலாம்...' என்றார்.

'நான் வருவதென்றால், பல்லக்கில் தான் வருவேன். அத்துடன், பல்லக்குத் தூக்குபவர்களில், நீங்களும் ஒருவராக இருக்க வேண்டும். சம்மதமா...' என்றான்.

'இவன் நம்மையும் பல்லக்கு தூக்கச் சொல்கிறான் என்றால், ராம நாமம், மிகுந்த மகிமை உடையதாகத் தான் இருக்க வேண்டும்; அதனால் தான் இப்படி எல்லாம் பேசுகிறான்...' என்று எண்ணிய யமதர்ம ராஜா, அதற்கு சம்மதித்து, அவனை பல்லக்கில் உட்கார வைத்து, சுமந்து கொண்டு இந்திரனிடம் போனார்.

இந்திரனோ, 'ராம நாமத்தை என்னால் எடை போட முடியாது; பிரம்மதேவரிடம் கேட்போம்; வாருங்கள்...' என்றார்.

'யமதர்மனோடு, இந்திரனும் சேர்ந்து பல்லக்கு தூக்கினால் தான் வருவேன்...' என்று மீண்டும் அவன் நிபந்தனை விதித்தான்.

அதற்கு இந்திரனும் ஒப்புக் கொண்டான். பல்லக்கை சுமந்து கொண்டு, பிரம்மாவிடம் சென்றனர்.

அவரும், 'ராம நாம மகிமை சொல்ல, என்னால் ஆகாது; வைகுண்டம் போய், அந்த பரம்பொருளையே கேட்கலாம் வாருங்கள்...' என்று சொல்ல, அவரும் பல்லக்கு சுமக்கும்படியாக ஆயிற்று.

அனைவரும் மகா விஷ்ணுவிடம் சென்று, 'இந்தப் பல்லக்கில் இருக்கும் ஆன்மா, ஒருமுறை ராம நாமத்தை சொல்லியிருக்கிறது; அதற்காக, இவனுக்கு என்ன புண்ணியம் என்பதை தாங்கள் தான் கூற வேண்டும். எங்களால் முடியவில்லை...' என்றனர்.

'இந்த ஜீவனை பல்லக்கில் வைத்து, நீங்கள் எல்லாரும் சுமந்து வருகிறீர்களே... இதிலிருந்தே ராம நாம மகிமை தெரியவில்லையா...' என்று சொல்லி, பல்லக்கில் வந்த ஆன்மாவை தன்னுடன் சேர்த்துக் கொண்டார் பகவான்.

அலட்சியமின்றி, ஆண்டவன் நாமம் சொல்வோம்; அவனருளாலே அல்லல்களை வெல்வோம்.

*ராம ராம ராம ராம...!!!*

---

மார்ச் மாத இதழ்
ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் சிறப்பு இதழாக
வெளிவருகிறது



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான “£
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

## 72. ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
## சூழினும் தான்முந் துறும்

மற்றொன்று = ஊழைத்தவிர்த்து வேறொன்றை, சூழினும் = நினைத்தாலும், தான் = ஊழே, முந்து = முன்னர், உறும் = நிற்கும், (ஆதலால்), ஊழின் = ஊழைக் காட்டிலும், பெருவலி = அதிகவலியுள்ளது. யா = யானை இருக்கின்றன?

தைவமே அதிகபலமுடையது என மகாபாரதத்தில் ஆதிபர்வம் 21வது அத்யாயம் 5வது சுலோகமும், சபாபர்வம் 74ஆவது அத்யாயம் 35 ஆவது சுலோகமும், சபாபர்வம் 74ஆவது அத்யாயம் 35ஆவது சுலோகமும், கர்ணபர்வம் 6ஆவது அத்யாயம் 3ஆவது சுலோகமும் கூறும். மகாபாரதம் கர்ணபர்வம் 22ஆவது அத்யாயம் 31ஆவது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணத்திலும், அயோத்தியா காண்டம் 22ஆவது சர்க்கத்தில் புமான் என்னும் 21ஆவது சுலோகத்திலும், 30ஆவது சுலோகத்திலும், இக்கருத்தே கூறப்பட்டிருக்கிறது.

கர்மம், தன்முயற்சி இவ்விரண்டனுள் அறத்தை செய்ய தன் முயற்சிக்கு ஆற்றல் அதிகமென்றும் பொருளை அடைவதற்கும் காமத்தை நுகர்வதற்கு ஊழிற்கு ஆற்றல் அதிகமெனவும் உணர்க.

## 73. படைகுடி கூழமைச்சு நட்பா ணாறு
## முடையா னரசரு ளேறு

அரசருள் = அரசர்களுள், படை = சேனை, குடி = நாடு, கூழ் = பொக்கிஷம், அமைச்சு = மந்திரி, நட்பு = சிநேகிதர், அரண் = கோட்டை, ஆறும் = இவ்வாறினையும், உடையான் = உடையவனே, ஏறு = சிறந்தவன் (ஆவான்).

கூழ் என்பதும் கோசம் என்பதும் ஒரே பொருளைக் கொண்டது. அமைச்சு, நட்பு, என்பது அமைச்சன், நண்பன் என்பனவற்றின் கடைக்குறை. அமைச்சன் என்பது வடமொழி அமாத்யன் என்பதின் தத்பவம்.

*மகாபாரதம் சாந்திபர்வம் 68ஆவது அத்யாயம் 69, 70, 32, 40ஆவது சுலோகங்களில் நான் அமாத்யன் கோஸம் எனக் கூறப்பட்டது காண்க. அவ்வாறே ஸ்வாமி - அமாத்ய - ஜன .... என்றும் அர்த்தசாஸ்த்ரம் கூறும். அங்கு ஆத்மா புரம், இவற்றிற்கு ப்ரதியாக ஸ்வாமி, துர்க்கம் என்று உள்ளன. இவ்வேழில் நான் என்பது சொல்லாமலே விளங்குமாதலால் மற்ற ஆறும் இக்குறளில் கூறப்பட்டிருக்கிறது.*


## 74. முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்.

*முறை = அரசநிதியை, செய்து = அனுசரித்து, (மக்களை) காப்பாற்றும், மன்னவன், மக்கட்கு, இறை = கடவுள், என்று வைக்க = கருதப்படுதல், படும் = பொருந்தும்.*

*அரசநீதி மஹாபாரதத்திலும் தர்மசாஸ்த்ரங்களிலும், அர்த்தசாஸ்த்ரங்களிலும் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. நீதிப்படி மக்களைக் காப்பாற்றும் மன்னன் ஆயிரம் அச்வமேத யாகத்தின் பயனையடைவான் என மகாபாரதம் ஆச்ரமவாஸபர்வம் 8ஆவது அத்யாயம் 23ஆவது சுலோகம் கூறும்.*

*ந அவிஷ்ணு - ப்ருத்வீபதி: என்பது சாஸ்திரம் இந்த்ர அனில - யம - அர்காணாம் - அக்னேச்ச வருணஸ்ய - நிர்ஹ்ருத்ய - ஸாச்வதீ : யஸ்மாத் ஏஷாம் என்று கூறுகின்றன மனுஸ்ம்ருதி 7ஆவது அத்யாயம் 4ஆவது, 5ஆவது ஸ்லோகங்கள்.*

இப்போது யாருக்குமே நிறைவு இல்லை. சமூக வாழ்க்கையிலும் பரஸ்பர சௌஜன்யம் போய் போட்டியும், பொறாமையும் வலுத்து விட்டன. ஒருத்தன் ஆடம்பரமாக இருந்தால் மற்றவர்களுக்கும் அதில் ஆசை ஏற்படத்தானே செய்யும்? எல்லோருக்கும் எல்லா ஆசைகளும் நிறைவேறுவது எங்கேனும் சாத்தியமா? ஏமாற்றம் உண்டாகிறது. ஆசை நிறைவேறாவிட்டால் விரோதம் ஏற்படுகிறது.



# இராமாவதாரம் எதற்காக ?

இராமாயணம் சீனிவாசன்

த்ரயாணாமபி லோகானாம்
யாவத் ராமஸ்ய த$_3$ர்சனம்
சாபஸ்யந்தம் உபாக$_3$ம்ய ।
தேஷாம் தர்சனம் ஆகதா: 16 ।

ராமனைக் காணாத வரையில் மூன்று உலகில் உள்ளவர்களாலும் காணமுடியாத அஹல்யா, கணவனின் சாபம் முடிந்து விட்டபடியால் அவர்களின் கண்களுக்கு தென்பட்டாள்.

ராக$_4$வெள து ததா தஸ்யா:
பாதெ$_3$ள ஜக்ருதுர் முதா$_3$ ।
ஸமரந்தீம் கெ$_3$ளதம வச:
ப்ரதி ஜக்ராஹ ஸாஹிதெள ।। 17

ரகு குலத்தில் வந்த ராம லக்ஷ்மணர்கள் இருவரும் அவளின் கால்களை பற்றிக் கொண்டனர். தன் கணவர் கெளதமர் சொன்ன சொற்களை நினைத்து அவளும் அவர்களின் பாதங்களை பற்றிக் கொண்டாள்.

பாத்$_3$யம் அர்க்$_4$யம் ததா$_2$ ஆதித்$_2$யம்
சகார ஸுஸமாஹிதா ।
ப்ரதிஜக்ராஹ காகுஸ்தோ
வதிவத் யேன காமறோ ।। 18 ।।

கால் கை அலம்ப நீர் களித்து விருந்தாளியை உபசரிப்பது போன்று அஹல்யை செய்தாள். முறைப்படி செய்யப்பட்டதை ககுஸ்த குலத்தோன்றல்களாகிய ராம லக்ஷ்மணர்கள் ஏற்றுக் கொண்டனர்.

பூமாரிபொழிந்து தேவதுந்துபி முழங்கின. கந்தர்வர்கள் அப்ஸரஸ்ஸுகள் ஆகியோர் உத்ஸாஹமாக கொண்டாடினர். நல்லது நல்லது என்று தேவர்கள் அஹல்யையை பூஜித்தனர். தவ வலிமையால் தூய்மையானவளாய் கெளதமரிடம் போய் சேர்ந்தாள்.

கௌதமரும் அஹல்யை ஏற்று அவளுடன் சேர்ந்து ராமனை முறைப்படி பூஜித்தனர். ராமனும், கௌதமரின் பூஜையை ஏற்று மிதிலையைநோக்கி செல்லத் தொடங்கினான்.

இந்த நிகழ்ச்சி நடந்தது தசரதன் புத்ர காமேஷ்டி யாகம் செய்வதற்கு முன்னால், தசரதன் மகனாக அவதரிப்பதாக உறுதிஅளித்த பகவான் விஷ்ணு தசரதனை தன்னுடைய தந்தையாக நினைத்துக் கொண்டான் என்று கூறப்பட்டிருந்தது. வாசகர்கட்கு நினைவிருக்கும். தசரதன் மகன் ராமர் வந்து தான் அஹல்யைக்கு காமத்தில் இருந்து விடுதலை என்று கௌதமர் முன்னமேயே சொல்லி இருந்ததால் அவரின் வேண்டுகோளையும் நிறைவேற்ற மகனாக தோன்றுவதற்கு முன்னமேயே தன்னை தசரதன் மகனாக ஆக்கிக் கொண்டான். ஆக பகவான் ராமனாக தோன்றியதற்கு முதற்காரணம் கௌதமரின் வேண்டுகோள் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

ஹல்ய: எனில் தோஷம். அஹல்ய எனில் தோஷம் இல்லாதது என்று பொருள்.

இந்த வரலாற்றை மேலும் விவாதித்துக் கொண்டு போகலாம். அதுவல்ல நோக்கம். ராமாவதாரம் உண்டானது கௌதமரின் சொற்களை நிஜமாக்க என்பது ஒரு முக்கிய காரணம் என்பதை தெரிவிப்பதுதான் முக்கிய நோக்கம்.

இந்த விஷயத்தோடு தொடர்பு கொண்ட ஒரு நிகழ்ச்சியை மட்டும் விவரித்து இந்த கட்டுரை முடிவுக்கு கொண்டு வரப்படும்.

விச்வாமித்ரருடன் ராம லக்ஷ்மணர்கள் மிதிலை சென்று அடைந்தனர். இவர்களை வரவேற்றவர் ஜனக மன்னனின் அரண்மனையில் உள்ள சதானந்தர். இவர் அஹல்யையின் மகன். இவருக்கு ராமனை விச்வாமித்ரர் அறிமுகப்படுத்தி நடந்த நிகழ்ச்சிகள் யாவற்றையும் தெரிவிக்கின்றார். அப்போது சதானந்தர் விச்வாமித்ரரிடம் இங்ஙனம் கேட்கின்றார்.

*அபிதே முனி சார்தூல மம மாதா யசஸ்வனீ ।*
*த$_3$ர்சிதா ராஜபுத்ராய தபோ தீர்த$_4$முபாத$_3$தா ।। 51*

முனிவர்களில் புலி போன்றவரே, புகழ்மிக்க என் தாயை இந்த மன்னன், மகன்களுக்கு தவத்தினால் வெகு உயர்ந்த நிலைக்கு வந்துள்ளவரை தரிசனம் செய்து வைத்தீர்களோ?

(தொடரும்)

# ஸத் விஷய ஸங்கரஹம்

विश्वे देवा: **விச்வே தேவர்கள்**

*நாந்தி சிராத்தத்தில்*

| | |
|---|---|
| सत्य: | *ஸத்யர்* |
| वसु: | *வஸு* |

*சிராத்தத்தில்*

| | |
|---|---|
| पुरुरव: | *புரூரவர்* |
| आद्रव: | *ஆத்ரவர்* |

*மஹாளய சிராத்தத்தில்*

| | |
|---|---|
| धुरि: (ध्वनि:) | *துரி (த்வநி)* |
| रोचन: (लोचन:) | *ரோசநர் (லோசநர்)* |

*ஸபிண்டீகரண ச்ராத்தத்தில்*

| | |
|---|---|
| काल: | *காலர்* |
| काम: | *காமர்* |

*யதி ச்ராத்தத்தில்*

| | |
|---|---|
| साधु: | *ஸாது* |
| सद्गुरु: | *ஸத்குரு* |

*யாகத்தில்*

| | |
|---|---|
| क्रतु: | *க்ரது* |
| दक्ष: | *தக்ஷர்* |

पञ्च कन्या: *5 கன்னிகள் (பதிவிரதைகள்)*

| | |
|---|---|
| अहल्या | *அஹல்யா* |
| द्रौपदी | *த்ரௌபதீ* |
| सीता | *ஸீதா* |
| तारा | *தாரா* |
| मन्दोदरी | *மந்தோதரீ* |

चिरजीविन: *சிரஞ்சீவிகள்*

| | |
|---|---|
| अश्वत्थामा | *அச்வத்தாமா* |
| बलि: | *பலி* |
| व्यास: | *வ்யாசர்* |
| हनुमान् | *ஹனுமான்* |
| विभीषण: | *விபீஷணர்* |
| कृप: | *க்ருபர்* |
| परशुराम: | *பரசுராமர்* |
| मार्कण्डेय: | *மார்கண்டேயர்* |

श्रीमहाभरते पर्वाणि १८

*மஹாபாரதத்தில் பர்வங்கள் 18*

| | |
|---|---|
| आदिपर्व | *ஆதி பர்வம்* |
| सभापर्व | *ஸபா பர்வம்* |
| वनपर्व | *வந பர்வம்* |
| विराटपर्व | *விராட பர்வம்* |
| उद्योग पर्व | *உத்யோக பர்வம்* |
| भीष्म पर्व | *பீஷ்ம பர்வம்* |
| द्रोण पर्व | *துரோண பர்வம்* |
| कर्ण पर्व | *கர்ண பர்வம்* |
| शल्प पर्व | *சல்ய பர்வம்* |
| सौप्तिक पर्व | *ஸௌப்திக பர்வம்* |
| स्त्री पर्व | *ஸ்திரீ பர்வம்* |
| शान्ति पर्व | *சாந்தி பர்வம்* |
| अनुशासन पर्व | *அநுசானை பர்வம்* |
| अश्वमेधिक पर्व | *ஆச்வமேதிக பர்வம்* |
| अश्रमवासिक पर्व | *ஆச்ரமவாஸிக பர்வம்* |
| मौसल पर्व | *மௌஸல பர்வம்* |
| महाप्रस्थान पर्व | *மஹாப்ரதஸ்தான பர்வம்* |
| स्वर्गरोहण पर्व | *ஸ்வர்காரோஹண பர்வம்* |

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

17. இவ்வாறு கலியின் தோஷங்களைப் பார்த்த வண்ணம் வந்து கொண்டிருந்த நான் எம்பெருமான் லீலைகள் புரிந்த யமுனையின் கரையை அடைந்தேன்.

18. அங்கு நான் ஓர் ஆச்சர்யம் கண்டேன். தனியாக ஓர் அழகிய இளம்பெண் ஒடிந்த உள்ளத்தினளாய் இருக்கக் கண்டேன்.

19. அவன் பக்கத்தில் இரண்டு முதியவர்கள் விழுந்து கிடந்தார்கள். அவர்கள் அசைவில்லாதவர்களாய் மூச்சு மட்டும் விட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் அவர்களுக்குப் பணிவிடை செய்து எழுப்ப முயன்றவாள் அழுதவண்ணம் இருந்தாள்.

20. அவள் சொன்னாள் “எனக்கு பக்தி என்று பெயர். இவர்கள் என்னுடைய மகன்களாகக் கருதப்பட வேண்டியவர்கள். ஞானம், வைராக்யம் என்ற பெயர் உடையவர்கள். காலத்தின் போக்கால் இழந்த இளமையுடையவர்கள்”.

21. ஸனகாதி முனிவர்கள் சொன்னார்கள். “தபத்தாலோ, ஞான கர்ம யோகத்தாலோ அடைய முடியாத பயனைக் கலியுகத்தில் கேசவநாம கீர்த்தனையால் அடையலாம்.”

22. கலியுகத்தையும், கலியில் பிறந்தவர்கள் சுகத்தையும் உபதேசித்து பரீக்ஷித் மஹா ராஜா ஸாரங்களின் ஸாரமான ஸ்ரீமத் பாகவதத்தை நிலை நிறுத்தினார்.

23. “பெண்ணே! வீணாகக் கவலையுறுகிறாய். மனத்துயரால் என்ன செய்வது? துயர் தீர ஒரே வழி எம்பெருமான் கண்ணனின் திருவடியை நினை. துக்கம் போய்விடும்.” என்று நாரதர் சொன்னார்.

24. “கௌரவர்களால் வேதனைப்பட்ட த்ரௌபதி எம்பெருமான் கண்ணன் திருநாமத்தால் காப்பாற்றப்பட்டாள். ஆயர்பாடிப் பெண்கள் கடும் மழையினின்றும் கண்ணனால் காப்பாற்றப்பட்டார்கள். எனவே அந்த எம்பெருமான் கண்ணனை ஏன் சரணாகதி பண்ணவில்லை?” என்று நாரதர் சொன்னார். மேலும், அவர் தொடர்ந்தார். அம்மா நீ

25. பக்தி பகவானுக்குப் ப்ரியமானவள். எப்பொழுதும் பிராணனைவிட அதிகமான ப்ரியத்தை அவனிடம் காட்டுகிறாய். நீ மனமுவந்து அழைத்தால் அவன் நிச்சயம்

வருவான். பகவானை மனம் உவந்து அழைத்ததால் மிகவும் மோசமான நடத்தை உள்ளவன் வீட்டிற்கும் வருவானெனில் நீயழைத்தால் வரமாட்டானா? என்றார்.

26. தபத்தினாலோ, வேத அத்யயனம், கர்மயோகம், ஞானயோகங்களினாலோ, ஸ்ரூபலக்ஷணத்தாலோ அடையமுடியாத பகவானை அசையா பக்தி ஒன்றினால்தான் அடைய முடியும். அதற்கு அகச்சான்று கோபிகைகள்.

27. வ்ரதங்கள் போதும், தீர்த்தயாத்ரைகள் போதும், ஞான கர்ம யோகங்கள் வேள்விகள், ஞானக்கதைகள் இவைகளை நடைமுறைப்படுத்தியது போதும். இவையாவற்றிலும் சிறந்தது கிருஷ்ணபக்தி.

28. ஸனாகதி முனிவர்கள் சொன்ன ரகசியம் இது. அவர்களுக்கு நன்றி கூறுவான் முனைந்து நாரதர் ‘ஸனகாதி குமாரர்களே! இப்பொழுது அடியேனுடைய பெரும் பாக்கியத்தால் உங்களோடு சேரும் நிலை ஏற்பட்டுள்ளது. என் மேல் கருணைகூர்ந்து ஸ்ரீமத் பாகவதத்தின் பெருமைகளைக் கூறுங்கள்’

29. தாங்கள் எலலோரும் யோகிகள். அறிவாளிகள், நிறைய கேள்வி ஞானம் உடையவர்கள். முனைவர்களுக்கெல்லாம் முனைவர்கள், இருப்பினும் ஐந்து வயதுள்ளவர்களாகவே தோன்றுகிறீர்கள்.

## ஸனகாதி முனிவர்கள்:

30. “நாரதரே! நீர் மிகவும் கொடுத்து வைத்தவர். பற்றற்றவர்களில் தலையானவர். எப்பொழுதும் எம்பெருமான் திருநாமத்தையே சொல்பவராய், எம்பெருமான் அடியவராய் இருப்பவர்களில் முதன்மையானவர் சுருக்கமாகச் சொன்னால் நீர் ஓர் யோக சூரியன்.”

31. “எல்லா செயல்பாடுகளையும் கணித்து அறிபவர். நிச்சயம், ஞானம், வேள்வி இவையறிந்த பேரறிவாளராம் சுகப்பிரம்மம் போன்றவர்களால் ஸ்ரீமத் பாகவதம் இசைக்கப்பட்ட காரணம் அறிவீர்.”

32. “ஒருவனுக்கு பாக்யம் உதயமாவது பல பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பயன். ஆதலால் புருஷர்கள் ஸத்ஸங்கத்தை அடைகிறார்கள். அறியாமையால் ஏற்பட்ட ஹோமம், கர்வம் ஆகிய இருள்கள் பக்தியினால் தான் தீரும் என்று எண்ணியபோது மனிதர்களுக்கு விவேகம் தலையெடுக்கிறது.”

33. எங்கு ஸ்ரீமத் பாகவதம் வார்த்தை உள்ளதோ அங்கு பக்தி, ஞானம், வைராக்கியம் இவை அடைகின்றன. ஸ்ரீமத் பாகவதத்தை அதன் ஒலியைக் கேட்டு தந்திரங்கள் தளிர்விடுகின்றன.

# 2019 ஜனவரி மாதம் ஸ்ரீ மடத்தின் நிகழ்ச்சிகள்



♦ 02.01.19 அன்று ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் ஆராதனை மிகவும் விமரிசையாக அவருடைய ப்ருந்தாவனத்தில் நடந்தேறியது. அன்று காலை 8.00 மணிக்கு 45 சங்கீத வித்வான்கள் / விதுஷிகள் கலந்து கொண்ட பஞ்சரத்ன கீர்த்தனைகள் பாடப்பட்டன. ஆராதனைக்காக ஏற்படப்பட்ட 32 வேத விற்பன்னர்களுக்கு வஸ்திரம் வழங்கப்பட்டு அவர்கள் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோவில் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பசுமாடு, வேத கோஷம், பஜனை, மங்கள வாத்யத்துடன் ஊர்வலமாக ஸ்ரீமடத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் ப்ருந்தாவனத்தில் விசேஷ அபிஷேகம் அலங்காரம் மற்றும் பூஜைகள் செய்யப்பட்டன. ஏகாதச ருத்ர ஜபம் ஹோமம் செய்யப்பட்டது. கோவிந்தபுரம் ஸ்ரீ ஜயகிருஷ்ண தீக்ஷிதர் குழுவினரால் விசேஷமான நாம சங்கீர்த்தனம் நடைபெற்றது. தீர்த்த நாராயண பூஜையுடன் மதியம் 2.30 மணியளவில் ஆராதனை விசேஷங்கள் நடைபெற்றன. ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் இந்த வைபவங்களை முன்னின்று நடத்தி, பக்தர்களுக்கு ஆராதனை அட்சதை ப்ரசாதம் வழங்கினார்கள். இந்த வைபவங்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு ஆசி பெற்றார்கள். யாவருக்கும் அன்ன ப்ரசாதம் வழங்கப்பட்டது. மாலையில் திரு. ராஜேஷ் குழவினரின் மாண்டலின் இசை எல்லோரையும் கவர்ந்தது.

♦ மகரிஷி சாந்திபணி வேத வித்யா ப்ரதிஷ்டான், உஜ்ஜயினி மற்றும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் இணைந்து 31.12.2018 முதல் 02.01.2019 வரை தென் பிராந்தியத்துக்கான ஒரு வேத சம்மேளனம் நடத்தப்பட்டது. இதில் தென் மாநிலங்களிலிருந்து சுமார் 100 வேத விற்பன்னர்கள் கௌரவிக்கப்பட்டு தகுந்த சன்மானமும் வழங்கப்பட்டது.

♦ இன்றைய இளைய தலைமுறைக்கு நம்முடைய கலாசாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், ஆசார அனுஷ்டானங்களைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலாச்சார பயிற்சி வகுப்பு ஒன்று ஜனவரி 6 மற்றம் 7 ஆம் தேதிகளில்

ஸ்ரீமடத்தின் வேடல் வளாகத்தில் நடைபெற்றது. இம்மாதிரியான வகுப்புகள் வருடத்திற்கு இரண்டு முறை நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

- ஸ்ரீ பெரியவாள் அவர்கள் சித்தியடைந்ததையொட்டி அவர்களுடைய முதலாவது ஆராதனைக்குள்-அதாவது ஒரு வருடத்தில், பாகவத ஸப்தாகம் பல்வேறு பாஷைகளில் நடத்தப்பட வேண்டும் என்ற அபிப்பிராயப்படி சென்ற வியாச பூஜையில் தொடங்கி பாகவத ஸப்தாகங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு அம்சமாக ஸ்ரீ நொச்சூர் வெங்கட்ராமன் அவர்களின் பாகவத ஸப்தாகம் ஜனவரி 5 முதல் 11 ஆம் தேதி வரை நடைபெற்றது. காலை 6 மணி முதல் 12 மணிவரை பாகவதம் மூல பாராயணமும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை, இனிய தமிழில் எல்லோரும் புரிந்து கொள்ளும்படியாக ப்ரவசனம் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

- பிரசித்தி பெற்ற ''தி ஹிந்து'' ஆங்கில நாளிதழின் ப்ரசுரகர்த்தா கஸ்தூரி - சன்ஸ் அவர்கள் தொகுத்து பிரசூரித்த ''Embodiment of Truth'' என்ற ஆங்கில புஸ்தகம் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் அவர்களால் வெளியிடப்பட்டது. ஹிந்துவின் ஸ்ரீராம் உட்பட பல பிரமுகர்கள் இதில் பங்கேற்றார்கள். இந்த புஸ்தகம் ஸ்ரீமடம் வளாகத்தில் உள்ள Book Centre ல் விற்பனைக்காக உள்ளது.

- ராஷ்டிரீய ஸ்வயம் சேவக் நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீ மோஹன் பகவத் அவர்கள் 10.01.19 அன்று ஸ்ரீமடத்திற்கு வந்திருந்து ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீ பெரியவாள் அவர்களின் ப்ருந்தாவனங்களை வழிபட்டு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அவர்களையும் சந்தித்து ஆசி பெற்றார். ஸ்ரீ பெரியவாள் சித்தி அடைந்த பிறகு முதன் முறையாக ஸ்ரீமடத்திற்கு இவர் வருகை தருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஸ்ரீமடத்தின் மூலமாக வேதங்களின் தத்துவங்களை பாதுகாத்து, பராமரித்து, பிரபலபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், வேத ஸப்தாகம் என்ற ஒரு வார நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. ரிக்வேதம், சுக்ல யஜுர் வேதம், க்ருஷ்ண யஜுர் வேதம் ஸாமவேதம் ஆகிய வேதங்களில் சப்தாகம் நடந்ததைத் தொடர்ந்து ஸ்ரீமடத்தில் ஜனவரி 7ம் தேதி முதல் 12ஆம் தேதி வரை அதர்வண வேத [சௌனக சாகை] ஸப்தாகமாக முழுவதும் பாராயணம் செய்யப்பட்டது. இதில் 14 வேத விற்பன்னர்கள் [அதர்வண வேதம் அத்யயனம் செய்தவர்கள்] பங்கேற்றனர். அதர்வ வேதம் முழுமையாக பாராயணம் செய்யப்படுவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பாராயணத்தின் பூர்த்தியில் அதர்வ வேதத்தின் சிறப்புகளை மிகவும் துல்லியமாக எடுத்துரைத்து, இந்த பாராயணத்தில் ஏற்படும் நன்மைகளைக்

கூறி ஆசிர்வதித்து பாராயணம் செய்தவர்களை கௌரவித்து சன்மானம் வழங்கினார்கள்.

- மார்கழி மாதம் 30 நாட்களும் பிரதிதினம் மாலை 5.30 முதல் 7.00 மணி வரை திருப்பாவை ஒவ்வொரு பாசுரத்திற்கும் தமிழ் புலவர் மா. கலைச்செல்வி அவர்கள் விளக்கம் அளித்து உரையாற்றினார்கள். இந்த நிகழ்ச்சி திருப்பதி தேவஸ்தானத்தின் மூலமாக நடத்தப்பட்டது.

- பொங்கல் விழா வழக்கம் போல சிறப்பாக நடந்தது. ஸ்ரீமடத்தின் கோ சாலைகள்-ஸ்ரீமடம், ஏனாத்தூர் மற்றும் வேடல் ஆகிய மூன்று இடத்திலும் கோ பூஜை செய்யப்பட்டு, பசுவை பராமரிக்கும் ஊழியர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தாருக்கும் சன்மானங்கள் வழங்கப்பட்டன. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் இந்த மூன்று கோ பூஜைகளிலும் கலந்து கொண்டு ஆசி வழங்கினார்கள்.

- ஸ்ரீ காஞ்சி மடத்தின் அறக்கட்டளை மூலம் ஏனாத்தூரில் நடத்தப்படும் ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் முதன் முறையாக மாட்டுப் பொங்கல் மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. ஏனாத்தூர் கிராம மக்கள் மற்றும் கிராமத்து பசுக்கள் இதில் பங்கேற்றார்கள். கிராமீய கலை நிகழ்ச்சிகள், கரகாட்டம், ஒயிலாட்டம் முதலியவை நடந்தன. கிராமத்து மக்கள் அனைவருக்கும் வேஷ்டி, புடவை முதலியவை அடங்கிய ஒரு பையும், பொங்கலுக்காக ஒரு தூக்கும் பரிசாக வழங்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் ஆசாரிய ஸ்வாமிகள் பங்கேற்று, பொங்கல் விழா 3 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படுவதின் தாத்பர்யத்தை கிராமமக்கள் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாக எடுத்துக் கூறி ஆசி வழங்கினார்கள். காஞ்சிபுரம் மாவட்ட முதன்மை நீதிபதி திரு ஜி. கருணாநிதி அவர்களும் மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு எம். பாலசுப்ரமண்யம் அவர்களும் நிகழ்ச்சியில் முன்னிலை வகித்தார்கள். காஞ்சிபுரம் பிரபலமான மருத்துவர்களும் வழக்கறிஞர்களும் இதில் பங்கேற்றனர்.

- ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் மாஸிக ஆராதனை வழக்கம்போல் ஜனவரி மாதம் 19ம் தேதி அன்று வைதீக முறைப்படி செய்விக்கப்பட்டது.

- 23.01.19 அன்று சுருட்டப்பள்ளியில் உள்ள பள்ளிக்கொண்டீஸ்வரர் ஆலய கும்பாபிஷேக நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தலைமையில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர். ஆச்சார்ய ஸ்வாமிகள் அனைவருக்கும் ஆசி வழங்கினார்கள்.

# மகா பெரியவாளின் அறிவுரை

## மன அழுக்கை போக்கி வழிநடத்திய மஹா பெரியவா



மன அழுக்கை போக்கி வழிநடத்திய மஹா பெரியவா என்பதற்கு இது ஓர் சான்று தன்னை தரிசிக்க ஒரு பக்தர் மடத்திற்கு வந்திருந்தார், வந்தவர் வரிசையில் நின்றார். தன்னோட முறை வந்ததும் பெரியவாளுக்கு நமஸ்காரம் பண்ணினார், எல்லாம் கடனேன்னு செய்யற மாதிரி தான் இருந்தது.

மஹா பெரியவா அவரைப் பார்த்து, ''என்ன சுவாமியையெல்லாம் திட்டறதுல இருந்து ஒரு வழியா ஓஞ்சிட்ட போலருக்கு. திட்டியும் பிரயோஜனம் இல்லைன்னு தோணிடுத்து. அதனால தினமும் பண்ணிண்டு இருந்த பூஜையைக் கூட நிறுத்திட்டே இல்லையா?'' அப்படின்னு கேட்டார்.

வந்தவருக்கு அதிர்ச்சி 'நாம எதுவுமே சொல்லல, ஆனா, எல்லாத்தையும் பக்கத்துல இருந்து பார்த்தவர் மாதிரி பரமாச்சார்யா சொல்றாரேன்னு ஆச்சரியம்.

''பெரியவா! குடும்பம் நடத்துறதே ரொம்ப கஷ்டமான ஜீவனமாயிடுத்து. சரியா வேலையும் கிடைக்கிறதில்லை. பகவானை வேண்டிண்டு ஒரு பிரயோஜனமும் இல்லைன்னு புரிஞ்சுடுத்து. மத்தவாளுக்கெல்லாம் கேட்குறதுக்கு முன்னாலேயே கொடுக்குற சாமி எனக்கு மட்டும் ஏன் இப்படி பண்றார்? அதான் எல்லாத்தையும் நிறுத்திட்டேன்!'' கண் ஓரத்துல நீர் தளும்ப தழுதழுப்பா சொன்னார் அவர்.

மஹா பெரியவா கூறிய எடுத்துக்காட்டு:

பரிவோட அவரைப் பார்த்தார் மகான், ‘‘ஒரு விஷயம் கேட்கிறேன். கரெக்டா யோசிச்சு சொல்லு. ஒரு ஆஸ்பத்திரிக்கு தினமும் எத்தனையோ நோயாளிகள் வருவா. சிலர் தலைவலின்னு வருவா, சிலருக்கு காய்ச்சல் வந்திருக்கும்.

இவாள்லாம் அங்கே இருக்கறச்சே பாம்பு கடிச்சுடுத்துன்னு ஒருத்தரைத் தூக்கிண்டு வருவா, இந்த மாதிரியான சந்தர்ப்பத்துல டாக்டர்கள் என்ன பண்ணுவா? யாருக்கு உடனடியா சிகிச்சை பண்ணனுமோ, யாருக்கு சட்டுனு சிகிச்சை பண்ணலைன்னா அப்புறம் அது பிரயோஜனப்படாதோ, யாருக்கு மரண அவஸ்தை தீரணுமோ அவாளைப் பார்க்கப் போயிடுவா.

அதுக்காக சாதாரண காய்ச்சல், தலைவலி வந்தவாளை டாக்டர்கள் அலட்சியப் படுத்தபடுத்தறாங்கறது அர்த்தம் இல்லை.

அவாளுக்கு கொஞ்சம் தாமதமா சிகிச்சை தந்துக்கலாம். பெரிய அவஸ்தை எதுவும் வந்துடாது. சாதாரண நோயாளிக்கு சிகிச்சை பண்ற டாக்டர்களுக்கே, யாருக்கு எப்போ உதவணும்கிறது தெரியறதுன்னா, பகவானுக்கு யாரோட பிரச்சனையை உடனடியா தீர்க்கணும்ன்னு தெரியாதா?

உனக்கு சுவாமியோட கடாட்சம் கிடைக்க கொஞ்சம் தாமதமாறதுன்னா, உன்னை விட அதிகமா அவஸ்தைப் பட்டுண்டு இருக்கற யாருக்கோ உதவுவதற்காக சுவாமி ஓடியிருக்கார்னு அர்த்தம்.

**மஹாபெரியவா அற்புதங்கள்:**

அந்த வேலை முடிஞ்சதும் அவசியம் உனக்கும் அனுக்கிரகம் பண்ணுவார். அதுக்குள்ளே அவசரப்பட்டு தெய்வத்தை நிந்திக்கிறதும், பூஜை, புனஸ்காரங்களை நிறுத்திட்டு நாஸ்திகம் பேசுறதும் தப்பில்லையா?’’

பெரியவா சொல்லச் சொல்ல, அந்த நபர் கண்ணில் இருந்து தாரை தாரையாக நீர் வடிஞ்சது. அதுவே அவரோட தவறான எண்ணத்தை அலம்பித் தள்ளி அவரோட மனசை சுத்தப்படுத்தியிருக்கும்கறது நிச்சயம்.


மனஅழுக்கைப் போக்கிக்க வழி செஞ்ச மகானை பரிபூரணமான நம்பிக்கையோட மறுபடியும் நமஸ்காரம் செஞ்சுண்டு புறப்பட்டார் வந்தவர்.

அவருக்கு மட்டுமில்லாமல் நம் அனைவருக்குமே பாடம் நடத்தியுள்ளார் நம் பெரியவா!

# வேத மந்த்ரார்த்தங்கள்

## மந்த்ரார்தங்கள் ஹிரண்யகர்ப்ப ஸூக்தம்

## ''ஹிரண்ய கர்ப்ப ஸமவர்ததாக்ரே''



ஹிரண்யகர்பரே முதலில் இருந்தார். உயிர்களின் ஏகபதியாக உள்ளார். அவர் இந்த பூமியையும் வானத்தையும் தாங்குகிறார். ''க'' எனும் அவரை ஆகுதிகளால் வழிபடுவோம். 1

யார் நம்மைத்தந்தாரோ, பலத்தைத் தந்தாரோ யாருடைய ஆணையை எல்லாத் தேவர்களும் ஏற்றுப் பணிகிறார்களோ யாருடைய நிழல் மரணமோ, மரணமில்லா நிலையோ அந்த ''க'' எனும் ப்ரம்மத்தை ஆகுதிகளினால் வழிபடுவோம். 2

மூச்சு விடுபவனாகவும், கண் இமைப்பவனாகவும் இந்த உயிர்க்குலத்திற்கு ஒரே தலைவனாக யார் தன் மகிமையால் ஆகி உள்ளாரோ இரண்டுகால், நாற்கால் ப்ராணிகளை ஆள்கிறாரோ அந்த''க'' எனும் தேவரை ஆகுதிகளால் வழிபடுவோம். 3

பனிச்சிகரங்களுடன் கூடிய இம்மலைகளும், ஆறுகளும் கடலும் யாருடைய மகிமையை போற்றுகின்றனவோ யாருடைய இரு கைகளும் திசையாக உள்ளனவோ அந்த ''க'' எனும் தேவரை ஆகுதிகளால் வழிபடுவோம். 4

யாரால் வானம் மகிமை பொருந்தியதாகவும், பூமி திடமாகவும் உள்ளதோ யாரால் ப்ரம்மலோகமும் சொர்கலோகமும் நிலை நிறுத்தப்பட்டதோ யார் வானவெளியில் வாயுக்களைப் படைத்தாரோ ''க'' எனும் அந்த தேவரை ஆகுதிகளினால் வழிபடுவோம். 5


யாரால் வானும் மண்ணும் படைக்கப்பட்டு நிலை பெற்றுள்ளதோ வானும் மண்ணும் யாரை எதிர்பார்த்து நிற்கிறதோ உதித்த ஸூர்யன் யாரில் அதிகமாக ஒளிர்கிறானோ ''க'' எனும் அந்த தேவரை ஆகுதிகளால் வழிபடுவோம். 6

படைப்பிற்கான முளையை தன்னுள் கொண்டதாயும், அக்னியை உருக்கியவாறு ப்ரளயகால வெள்ளம் எப்போது ப்ரபஞ்சத்தை வ்யாபித்திருந்ததோ அப்போது எல்லா தேவர்களின் ஒரே மூச்சு வெளிப்பட்டது. ''க'' எனும் அந்த தேவரை ஆகுதிகளால் வழிபடுவோம். 7

யார் தன் வலிமையால் படைப்பில் ஊழிக்கால வெள்ளத்தை நிலை நிறுத்தினாரோ யார் படைப்பாற்றலைத் தன்னுள் கொண்டிருந்தாரோ யார் வேள்வியை உருவாக்கினாரோ யார் தேவர்களின் தலைமைத் தெய்வமோ யார் ஒரே தேவனோ ''க'' எனும் அந்த தேவரை ஆகுதிகளால் வழிபடுவோம். 8

யார் நம்மைத் துன்புறுதுவதில்லையோ பூமியையும் ஆகாயத்தையும் படைத்தவர் யாரோ தவறாத ஆதாரமாக இருப்பவரோ யார் சந்த்ரன், கடல், பரந்த ப்ரபஞ்ச வாழ்க்கையை உருவாக்கியவரோ ''க'' எனும் அந்த தேவரை ஆகுதிகளினால் வழிபடுவோம். 9

உயிர்களின் தலைவரான எம்பெருமானே எல்லா உயிர்களையும் நீயே சூழ்ந்திருக்கிறாய். உன்னைத்தவிர யாரும் இல்லை. நாங்கள் செய்த வேள்விகளுக்கு உரிய பலன்கள் எமக்குக் கிடைக்கட்டும். நாங்கள் செல்வங்களுக்கு அதிபதிகளாக திகழ்வோம். 10



# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 10

ப்ரம்மஸ்ரீ அடையபலம் ராமக்ருஷ்ணதீக்ஷிதர்



மகான் அப்பைய்ய தீக்ஷிதரை எல்லாரும் அறிவர் 104 நூல்களை எழுதி லோகோபகாரம் செய்தவருக்கு சின்னபொம்மன் கனகாபிஷே கம் செய்தான். அவரும் இன்னாணயத்தைக் கொண்டு சிவ விஷ்ணு பேதமில்லாமல் ஆலயங்களை நிர்மாணம் செய்து 500 வித்வான்களுக்கு வேத வேதாந்ததத்தை கற்பித்தார். அவர் கட்டிய ஆலய ஜீர்ணோத்தத்திற்காக பெரியவா என்னைக் கூப்பிட்டு அனுப்பி சாஸ்த்ர அத்யயனத்திற்காக கட்டப்பட்ட ஆலய ஜீர்ணோத்தாரணம் யாசகத்தினால் செய்யப்படக் கூடாது, எனவே கோவை அருகே உள்ள கே வில்லேஜஸ் என்று இருக்கும் இடத்தில் உபன்யாஸம் செய், இதில் வரும் தனத்தைக் கொண்டு புதுப்பிக்கலாம் என்றார்கள். நானும் ஒரு மாதம் அங்கு உபன்யாசம் செய்து பெரிவாளை தர்சனம் செய்தேன். அவர் என்னிடம் கார்யம் சுக்லபக்ஷமா க்ருஷ்ணபக்ஷமா/ (வளர்சியா தேய்மானமா?) என்று கேட்க உங்கள் அருளால் பௌர்ணமிதான் என்றேன். அவரும் மிகவும் சந்தோஷப்பட்டு ஒரு ருத்ராக்ஷமணியைக் கொடுத்து வலக்கையில் கட்டிகொள் என்றார்கள். இது நடந்தது 1958இல்.

அவர் சொன்னபடி அதை அணிந்து வந்தேன். 1980 ஆம் வருடம் வில்லிவாக்கத்திற்கு பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தபோது ஜன்னலின் வெளியில் இருந்த என் கைமீது லாரி ஒன்று மோத நான் விழித்துக்கொண்டேன். பெரிய காயமில்லாமல் தப்பினேன். பெரிவாளின் கருணையை வியக்கிறேன். வலக்கையில் மணியை அணியச் சொன்னதன் பொருள் 22 வருடங்களுக்குப் பிறகுதான் புரிந்தது. அனந்தகோடி நமஸ்காரங்களை தினமும் அம்மகானுக்கு செய்து பிறவிப்பயனை அடைந்ததாகவே எண்ணுகிறேன். இப்படி பல நிகழ்ச்சிகள் என் வாழ்க்கையில்.

# வால்மீகி ப்ரதீபம் 48

இளம்பூரணர்.

## 96 சாத்வீகமா ? அடிதடி போராட்டமா

*ப்ரசமச்ச சமா சைவ ஆர்ஜவம் ப்ரியவாதிதா*
*அஸாமர்த்யம் பலந்த்யேதே*
*நிர்குணேஷு ஸதாம் குண:*
*ஆத்மசம்சினம் த்ருஷ்டம் விபரித்யாவகம்*
*ஸர்வத்ரோத்ஸ்ருஷ்ட தண்டம் ச லோக:*
*ஸத்க்ருதே நரம் நந*
(யுத்தகாண்டம் 21 15 16)

ஒரு மனிதனின் அமைதி பொறுமை நேர்மை, இன்சொல் இவைகளை அவனுடைய கையாலாகத்தனம் என்று லோகம் பார்க்கும். கடூரமாயும், க நெருங்கவே முடியாதவனாயும், தடி வைத்துக் கொண்டு ஹாய் ஹூய் என்று மிரட்டுபவனை பூஜை செய்யும் லோகம்.

எக்காலத்துக்கும் பொருத்தமான வாக்யம். ஸமுத்ரராஜன் தனக்கு உதவ வேண்டும் என்று ப்ரார்த்தித்தார் ராமர். வழி கிடைக்கவில்லை.

தர்பசயனத்தில் படுத்துக்கொண்டு போராடினார். அப்போதும் பதில் இல்லை. தனக்கு வந்த கோபத்தில் எழுந்தவை தான் மேலே சொன்ன ஸ்லோகம். லோக ரீதி எப்போதும் இப்படித்தான் இருந்து வருகிறது. உலகம் முழுவதும் இப்படித் தான். சாதாரணமாக கோரிக்கைகள் வைப்பார்கள். அரசும் ஆஹா நிறைவேற்றுகிறோம் என்று சொல்லும்.

ஆண்டுகள் ஓடும். கோரிக்கைகள் கிடப்பில் போட்டுவிடுவார்கள்.

பொறுமை கடந்து மக்கள் அடிதடியில் இறங்கி வேலை நிறுத்தம்

ஆரம்பிக்கும். வன்முறை தாண்டவமாடும். நடுவில் ANTI SOICIAL ELEMENTS மக்கள் சேர்ந்து தீவைப்பு பொதுசொத்து சேதம் எல்லாம் நிகழும். அரசும் பணியும். இதுதான் நடைமுறை. நம் நாட்டில் சுதந்திர போராட்டத்தை எடுத்துகொள்வோம். காந்திஜியும் அமைதிகாத்தார்.

ப்ரிட்டிஷ் அரசு. செவிசாய்த்ததா? இல்லை தண்டி யாத்ரை, வெள்ளையனே வெளியேறு எல்லாம் ஸாத்விகமான போராட்டம்தான். அவ்வளவு ஏன் நம் சங்கர மடத்தில் ஸ்ரீபுதுப் பெரியவரை கைது செய்தபோது வன்முறை நடந்ததா? அதே சமயம் யாரோ அரசியல் வாதி கைது செய்யப்பட்டால் எவ்வளவு கலாட்டா. பஸ் தீவைப்பு வரை நிகழ்ச்சிகள் அரங்கேறும்.

அந்த நிகழ்ச்சி நடந்தபோது ஸ்ரீமடத்து ஆதரவாளர்கள் மனிதச்சங்கிலி போராட்டம் நிகழ்தினர். எந்த தடாலடியும் இல்லை. ஒருவர் என்னிடம் கூறினார். என்ன நீங்கள் சும்மா இப்படி பண்றீங்க நாலுபஸ்களை

நிறுத்துங்க சார். அப்பத்தான் போராட்டம் வெற்றி அடையும். அரசு உங்களை கவனிக்கும். என்று. லோக ரீதி இப்படித்தான் உள்ளது. பேட்டை ரௌடிக்குத்தான் காலம். இதை ராமாயணமும் சுட்டிக்காட்டுகிறது.

*****

## தேவை மயக்கும் சொற்களா?

*ஸுலபா: புருஷா ராஜன் ஸததம்*
*ப்ரியவாதின:*
*அப்ரியஸ்து பத்யஸ்ய வக்தா ச ஸ்ரோதா ச*
*துர்லப: ॥*
*அஹிதம் ச ஹிதாகாரம்*
*தார்ஷ்ட்யாஜஜல்பந்தி யே நரா:*
*அவேக்ஷ்ய மந்த்ரவாஹாயாஸ்தே கர்தவ்யா:*
*க்ருத்யதூஷணா: ॥*

யுத்த காண்டம் 6 16 21 6 63 16

ஹே ராவணா உன்விருப்பப்படியே பேசுவதற்கும் தேனொழுக பேசுவதற்கும் நிறைய பேர் கிடைப்பார்கள். ஆனால் உண்மையை சொல்வதற்கும் ஆள் துர்லபம், கேட்பதற்கும் துர்லபம்.

உண்மையை மறைத்து தேனொழுகப் பேசும் மந்த்ரி நாட்டை நாசத்தில் தள்ளுகிறான். அவர்களை மன்னன் விலக்கி வைக்க வேண்டும். முதலில் கூறியது விபீஷணனுடையது. இரண்டாவது கும்பகர்ணனுடையது. இரண்டுமே ஒரு மன்னன் எப்படி ஆளவேண்டும் என்று கூறுகிறது. செருக்கில் திரிந்த ராவணன் சீதையைக் கொண்டு வந்தபின் நடந்த அனர்தங்கள் நிறைய. எங்கிருந்தோ வந்த குரங்கு தீ வைத்தது, பாலம் அமைத்து சேனை இலங்கை வந்தது, இவைகளைப் பார்த்த பின்னும் அவனுக்கு மமதை அழியவில்லை. காரணம் அவனுடைய மந்த்ரி மண்டலம். மால்யவான் தவிர மற்ற எல்லா அரக்கர்களும் உண்மை நிலமையை மறைத்து தூபம் போட்டனர்.

வீடணன் உண்மையை கூறி எதிப்பக்கம் சென்றான். கும்பகர்ணனோ எதிர்த்தான். ஆனால் பாசத்தில் கட்டுண்டான். இறுதியில் அனைவரும் கண்டது அழிவே. உலக அரசியல் ஏன் நம் நாட்டு அரசியலிலும் இப்படி பல நிகழ்ச்சிகளைக் கூறலாம். சைனாவில் மாசெதுங் GREAT LEAP எனும் இயக்கம் ஆரம்பித்தார். லக்ஷோப லக்ஷம் மக்கள் அழிந்தனர். அவருக்கு இது மறைத்து வைக்கபட்டது.

நம் நாட்டிலும் EMERGENCY யை நினவு கூர்ந்தால் பல உண்மைகள் புலப்படும். அப்போது இருந்த ப்ரதமரை மந்த்ரிகள் வானளாவு புகழ்ந்தனர். அவரே இந்தியா இந்தியாவே அவர் என்னும் அளவுக்கு போதை தலைக்கேறியது. விளைவு பாதாள வீழ்ச்சி. இப்படி பல நிகழ்ச்சிகள் ராமாயண ஸ்லோகங்களுக்கு விளக்கமாய் அமைந்துள்ளன. வீடணன் சொல் அக்ஷரலக்ஷம் பெறும்.

பிழை திருத்தம்
ஜனவரி இதழ் பக்கம் 9 தவறுக்கு வருந்துகிறோம்
ஓங்கார பஞ்சரசுகீம் உபனிஷத் உத்யானகேலிகலகண்டீம்
ஆகமவிபனிமயூரீம் ஆர்யாம் அந்தர் விபாவயே கௌரீம்

# மாசி மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 13-02-2019 | புதன்கிழமை | பீஷ்மாஷ்டமி |
| 16-02-2019 | சனிக்கிழமை | ஏகாதசி |
| 17-02-2019 | ஞாயிற்றுக்கிழமை | த்வாதசி |
| 17-02-2019 | ஞாயிற்றுக்கிழமை | ப்ரதோஷ பூஜை |
| 17-02-2019 | ஞாயிற்றுக்கிழமை | **ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் மாதாந்திர ஆராதனை தினம்** |
| 19-02-2019 | செவ்வாய்கிழமை | பௌர்ணமி பூஜை |
| 26-02-2019 | செவ்வாய்கிழமை | **கலவை பரமேஷ்டிகுரு பூஜ்யஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்ஆராதனை** |
| 26-02-2019 | செவ்வாய்கிழமை | அனுஷம் தேர் |
| 26-02-2019 | செவ்வாய்கிழமை | அனுஷம் பாராயணம் |
| 28-02-2019 | வியாழக்கிழமை | மூலம் தேர் |
| 02-03-2018 | சனிக்கிழமை | உத்ராடம் தேர் |
| 02-03-2018 | சனிக்கிழமை | ஏகாதசி |
| 03-03-2018 | ஞாயிற்றுக்கிழமை | உத்ராடம் பாராயணம் |
| 03-03-2018 | ஞாயிற்றுக்கிழமை | த்வாதசி |
| 03-03-2019 | ஞாயிற்றுக்கிழமை | ப்ரதோஷ பூஜை |
| 03-03-2019 | ஞாயிற்றுக்கிழமை | **காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஜெயந்தி** |
| 04-03-2019 | திங்கட்கிழமை | மஹாசிவராத்திரி |
| 04-03-2019 | திங்கட்கிழமை | அவிட்டம் தேர் |
| 05-03-2019 | செவ்வாய்கிழமை | அவிட்டம் பாராயணம் |
| 07-03-2019 | வியாழக்கிழமை | **கலவை பரமகுரு பூஜ்யஸ்ரீ மஹாதேவேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை** |
| 14-03-2019 | வியாழக்கிழமை | காரடையான்நோன்பு |
| 15/2/19, 22/2/19, 1/3/19 - 8/3/19 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# புராணக் கதை

## நந்த ஸரஸ்வதி கதை

**வாதூலன்**

நந்த ஸரஸ்வதி என்று ஒரு நதி இமயமலைச்சாரலில் ஓடிக்கொண்டிருந்த காலம். ஒரு நாள் அப்பக்கம் வந்த தேவவ்ரதன் என்னும் அரசன் பௌலஸ்த்யரிடம் இதற்கு ஏன் அப்பெயர் வந்தது என்று கேட்க அவர் கூறலானர்.

ப்ரபஞ்சனன் எனும் அரசன் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியவன், க்ஷத்ரியதர்மத்தைக் காப்பாற்றி வந்தான். ஒரு நாள் வேட்டையாட அவன் காட்டுக்குச் சென்றான். சலசப்புச் சப்தம் கேட்க தன் பாணத்தால் அதை அடித்தான். அந்தோ அடிபட்டது பால் கொடுத்துக்கொண்டிருந்த மான். அவனைப்பார்த்து மான் கூறியது.

இதயமில்லாதவனே பாபம் செய்யாத, குட்டிக்குப் பால் தந்துகொண்டிருக்கும் என்னை அடித்து விட்டாய். இது நீதியா தர்மமா? சொல். எல்லாரையும் காப்பாற்ற வேண்டியவன் அதர்மம் செய்யலாமா? இதயமில்லாத ஒரு புலியாகப் பிறந்து இக்காட்டில் திரி என்று சபித்தது. நடு நடுங்கிப்போன அரசன் தெரியாமல் செய்த பிழை. மன்னிக்கவேண்டும், ப்ராய்ச்சித்தம் செய்துகொள்கிறேன்.

இப்புலி உருவம் எப்போது போகும் மீண்டும் எப்போது மனித உருவம் வரும்? என்று கேட்டான். '' நூறு ஆண்டுகள் கழித்து நந்தா எனும் பசு இவ்விடத்தில் வரும், அதனுடன் நீ பேசும்போது சாபம் விலகும்''என்று கூறியது. அரசனும் புலி உருவம் எடுத்துக் கொண்டு அக்காட்டில் திரிய ஆரம்பித்தான்.

இப்படி நூறு ஆண்டுகள் ஓடின. அடர்ந்த அந்த கானகத்தில் துஷ்டமிருகங்கள் இஷ்டமாய்த் துள்ளி விளையாடின. கானகமாயிருந்தாலும் பச்சைப்பசேர் புல்வெளிகளும் ஓடைகளும் நிரம்பியிருந்தன. அன்றொரு நாள் மந்தை மந்தையாக ஒரு பசுக்கூட்டம் அவ்விடம்வந்தது. அதிலிருந்து வழி மாறி நந்தா எனும் பசு அந்த புல்தரையை மேயத்தொடங்கியது. வந்தது வினை.

என் அத்ரிஷ்டமே அத்ரிஷ்டம். நீயே எனக்கு உணவாக வருவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்ற அந்த கொடிய குரலைக் கேட்ட நந்தா அதிர்ந்து போய்

தன் மீது பாய இருக்கும் புலியைக் கண்டது. தான் சாவது நிச்சயம் என்று அறிந்தபின் தன் குழவியை நினைத்து கண்ணீர்விட்டது. ''எதற்காக அழுகிறாய்? உன் சாவு நிச்சயம், கடவுள் அதற்காகவே என் எதிரில் உன்னை அனுபியுள்ளார். சாவுக்குப்பயப்படுகிறாயா? சொல்'' என்று புலி கர்ஜித்தது.

நந்தா வன ராஜனே உமக்கு நமஸ்காரம் நான் மரணத்துக்குப் பயப்படவில்லை. ஆறிலும் சாவு நூறிலும் சாவு. பிறந்தது இறக்க வேண்டும். இது நியதி. ஆனாலும் என் குழவியின்மீது பாசத்தினால் அழுகிறேன். இப்போதுதான் ஈன்றகுழவி. தலைச்சன் என்பாலில்தான் வளர்கிறது. எனக்காகக் காத்திருப்பான். ஒரே ஒரு தடவை அவனுக்கு பால் கொடுத்துவிட்டு அவனுக்கு நல்லது கெட்டது சொல்லி என் சகாக்களிடம் ஒப்படைத்துவிட்டு மீண்டும் இங்கேயே வருவேன். நீர் என்னைப் பசியாறலாம்'''

(தொடரும்)


ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# வேதாந்த ஸாரம்

## ஸாதானந்த யோகி

வேங்கடகணபதி சர்மா

*அதிகாரீ து விதிவத் அதீத வேதவேதாங்கத்வேன அபாததோ அதிகத அகிலவேதார்தோஸ்மின் ஜன்மனி ஜன்மாந்தரே வா காம்ய நிஷித்தவர்ஜனபுரஸரம் நித்ய நியமித்திக ப்ராயச்சித்த உபாஸனானுஷ்டேன நிர்கத நிகிலகல்மஷதயா நிதாந்த நிர்மல ஸ்வாந்த: சாதனசதுஷ்டயஸமப்ன்ன: ப்ரமாதா ந 6*

*ப்ரமாதா அதாவது அதிகாரீ எனப்படுபவன் வேத வேதான்கங்களை பயின்றவனாகவும் அவைகளின் தாத்பர்யத்தை அறிந்தவனாகவும், காம்ய நிஷித்தகர்மாக்களால் இப்பிறவி, முற்பிறவிகளில் பாபங்களை அழித்தவனும், நித்ய, நைமித்திக கர்மாக்களை செய்பவனும், அனுஷ்டானத்தாலும் தவத்தாலும் சுத்த புத்தியை உடையவனும், நான்கு ஸாதனங்களை உடையவனாக இருக்கவேண்டும்.*

*காம்யானி ஸ்வர்காதீஷ்டஸதனானி ஜ்யோதிஷ்டோமாதீனி 7*

*ஜ்யோதிஷ்டோமம் போன்ற கர்மாக்கள் யாகம் செய்பவனுக்கு ஸ்வர்கம் கிடைக்கச்செய்யும். இவை காம்யகர்மா எனப்படும்.*

*நிஷித்தானி நரகாத்யனிஷ்டஸாதனானி ப்ராம்மணஹனனாதீனி 8*

*நரகத்தைக்கொடுக்கும் ப்ராமணனைக்கொல்லுதல் போன்ற அனிஷ்ட கர்மாக்கள் நிஷித்தமெனப்படும்*

*நித்யானி அகரணே ப்ரத்யவாயஸாதனானி ஸந்த்யாவந்தனாதீனி 9*

*எதைசெய்யாவிட்டால் பாபம் வருமோ அவை நித்யமெனப்படும் (ஸந்த்யாவந்தனம் முதலியவை)*

*நைமித்திகானி புத்ரஜன்மாத்யனுபந்தீனி ஜாதேஷ்ட்யாதீனி 10*

*நிமித்தமாக ஒரு கார்யம் செய்தல் புத்ரன் பிறந்தவுடன் ஜாதகர்மா செய்தல் நைமித்திகம் எனப்படும்.*

*ப்ராயச்சித்தானி பாபக்ஷயஸாதனானி சாந்த்ராயணாதீனி 11*

*பாபங்கள் போவதற்கு செய்யும் சாந்த்ராயணம் வ்ரதம் போன்றவை ப்ராயச்சித்த கர்மங்கள் எனப்படும்.*

*உபாஸனானி ஸகுணப்ரம்மவிஷயமானஸ வ்யாபார ரூபாணி ஸாண்டில்யவித்யாதீனி 12*

*சாண்டில்யவித்தை போன்றவைகளில் கூறப்படும் ஸகுணப்ரம்மத்தின் மீது செய்யப்படும் மானசிக வழிபாடு உபாஸனம் எனப்படும்.*

*இப்பகுதியில் வேதாந்தம் படிப்பதற்கு தகுதியையும், செய்யத் தக்க கர்மாக்கள், விலக்கத்தக்க கர்மாக்கள் உபாஸனம் பற்றி விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

- அனுஷம்
- மூலம்
- உத்ராடம்
- அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# ஸபா ரஞ்ஜன சதகம்

*நீலகண்ட தீக்ஷிதர்*

## க்ஷமா (பொறுமை)

**காலச்சாலயதி ப்ராய: பண்டிதான்பாமரானபி**
**தம் சேச்சிகீர்ஷஸி வசே த்திகைஷவ மஹௌஷதம் ॥ 67**

*பெரும்பாலும் விதியே பாமரனையும் பண்டிதனையும் ஆட்டிவிக்கிறது. அதை வெற்றி கொள்ள பொறுமையே மருந்து.*

**ரந்த்ரேஷு ப்ரஹரிஷ்யந்த: கதி காமாதயோ அரய:?**
**க்ஷணான்னஸ்யதி லோகோயம் க்ஷமா சேன்ன நியச்சதி ॥ 68**

*காமக்ரோதலோபங்கள் மனிதன் தடுமாற்றத்தில் இருக்கும்போது வெற்றிகொள்கின்றன. பொறுமை ஒன்றாலேயே இவைகளை வெற்றிகொள்ளலாம்.*

**அபகாரபராணாமபி உபகுர்வந்தி ஸாதவ:**
**சிந்தந்தமபி வ்ருக்ஷா: ஸ்வச்சாயயா கிம் ந ரக்ஷதி ॥ 69**

*தனக்கு அபகாரம் செய்தவனுக்குக் கூட ஸாதுக்கள் உதவி செய்வார்கள். தன்னை வெட்டும் மனிதனுக்கு நிழலைத்தரவில்லையா மரம்?*

**ஸ்ரவத்யேவ ஸதாஞ்யானம் ஸ்ரவத்யேவ ஸதா தப;**
**சித்ரம் சித்ரமனுப்ராப்ய ந சேச்சாதர்யாத க்ஷமா ॥ 70**

*ஞ்யானமோ தவமோ பொறுமையினால் காக்கப்படவில்லையெனில் கசிந்து அழிந்துபடும்.*

**க்ஷமாம் ரக்ஷந்தி யே யத்னாத்க்ஷமாம் ரக்ஷந்தி சிரம்**
**க்ஷமாஸ்தே நிப்ருதா யேஷு க்ஷமாஸ்தே ஸர்வகர்மஸு ॥ 71**

*யார் பொறுமைக்காக்கிறார்களோ அவர்களே இப்புவியைக் காப்பார்கள். பொறுமை யாரிடம் அதிகமுள்ளதோ அவர்களே கர்மங்களில் அனைத்திலும் வெற்றிபெறுவார்கள்.*

**மூர்க்கா: சமயிதும் துக்கம் ஸம்ரபந்தே தத்ஸ்தத:**
**க்ஷமயைவ நிக்ருண்ணந்தி தீரா: ஸம்ரம்பவர்ஜிதா: ॥ 72**

*துக்கத்தை பரபரப்பாக மூர்க்கர்கள் அடக்கவிழைவார்கள். ஆனால் தீரர்களோ பரபரப்பு எதுவுமில்லாமல் பொறுமையினால் துக்கத்தை விரட்டுவார்கள்.*

**ஆகல்யாதா நிசீதாச்ச குக்ஷ்யர்தம் வ்ய்ப்ரியாமஹே**
**ந ச நிவ்ருணமோ ஜாது சாந்தாஸ்து ஸுகமாஸதே ।। 73**

*இந்த வயிற்றை நிரப்ப காலைமுதல் இரவு வரை என்னவெல்லாம் செய்கிறோம்.ஆனால் பொறுமை உள்ளவர்கள் இருந்த இடத்திலேயே அனைத்தையும் பெறுகிறார்கள்.*

**நாயஸ்யந்தி சரீராணி ந தைன்யம் அவபுத்யஸே**
**ஸம்பவத்யபி சானந்த: சாந்திமப்யஸ்யதாம் ஸதாம்நச 74**

*பொறுமையை அப்யாஸம் செய்பவர்கள் சரீரத்தால் ஆயாஸப்படுவதில்லை,யாரிடமும் கையேந்துவதில்லை. இவை இல்லாமலே ஆனந்தத்தை அடைகிறார்கள்.*

**ப்ரஸீதத்யபரிஸ்பந்தி பய: கலுஷிதம் யதா**
**ததா சாந்தமபி ஸ்வாந்தம் ப்ரஸீததி சனை: சனை: ।। 75**

*கலங்கிய நீர் அசைக்காமல் விட்டால் தானே தெளிந்துவிடும். கலங்கிய மனமும் பொறுமையினால் தானே தெளிந்துவிடும்.*

**யத்னேன மஹதா லப்யா தாஸா த்வித்ரா: ஸுகய ந;**
**சாந்தஸ்ய காலாத்த்ருஷ்டாத்யா: சத ப்ருத்யா: அவேதனா: ।। 76**

எவ்வளவு கஷ்டப்பட்டாலும் கூலிக்கு இரண்டு மூன்றுபேர்கள் தான் கிடைப்பார்கள்.ஆனால் சாந்தஸ்வரூபிகளுக்கு கூலியில்லாமலேயே நல்லகாலம், நல்லபொழுது, அத்ருஷ்டம் போன்ற வேலைக்காரர்கள் கிடைப்பார்கள்.

**கலை(ந்த) சொற்கள்**
**ஜனவரி விடைகள்**

1. பஜனாம்ருத தாரை
2. விவேக சூடாமணி
3. திருபுரா ரஹஸ்யம்
4. சமுதாயசிந்தனை
5. உரை ஆசிரியர்கள்

**கலை(ந்த) சொற்கள்**
**பிப்ரவரி வினாக்கள்**

1. தெநமாடம்டுய்ம்வ
2. ணாபசன்ருக்த்பயராய
3. அதிக்ருள்முறம்தகு
4. வாநசிமழ்வாயக
5. போபாத நாரடுற்வோம்று

# பாராயண பக்கம்

எகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுருவானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்று இங்கு அறியேன் போற்றி
குற்றாலத்து எம் கூத்தா போற்றி
கோகழிமேவிய கோவே போற்றி
ஈங்கோய்மலை எம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத்து அழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
இத்தித் தன்னிங்கீழ் இரு மூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி (திருவாசகம்)

நீராய் நிலனாய் தீயாய் காலாய் நெடுவான் ஆய்
சீரார்சுடர்கள் இரண்டு ஆய் சிவனாய் அயனாய்
கூராராழி வெண் சங்கு ஏத்தி கொடியேன்பால்
வாராய் ஒரு நாள் மண்ணும் விண்ணும் மகிழவே.
மண்ணும் விண்ணும் மகிழ குறளாய் வலம் காட்டி
மண்ணும் விண்ணும் கொண்ட மாய அம்மானே
நண்ணி உனை நான் கண்டு உகந்து கூத்தாட
நண்ணி ஒரு நாள் ஞாலத்தூடே நடவாயே.

ஞாலத்தூடே நடத்தும் நின்றும் கிடந்து இருந்தும்
சாலப் பல நாள் உகம்தோறும் உயிர்கள் காப்பானே
கோலத்திரு மா மகளோடு உன்னைக்கூடாதே
சாலப்பல நாள் அடியேன் இன்னும் தளர்வேனோ . (நம்மாழ்வார்)

# பாராயண ஸ்லோகங்கள்

ஔஷதே சிந்த்யேத் விஷ்ணும் போஜனே ச ஜனர்தனம்
சயனே பத்மனாபம் ச விவாஹே ச ப்ரஜாபதிம் ॥
யுத்தே சக்ரதரம் தேவம் ப்ரவாஸே ச த்ரிவிக்ரமம்
நாராயணம் தனுத்யாகே ஸ்ரீதரம் ப்ரியஸங்கமே ॥
துஸ்வப்னே ஸ்மர கோவிந்தம் ஸங்கடே மதுஸூதனம்
கானனே நாரஸிம்ஹம் ச பாவகே ஜலசாயினம் ॥
ஜலமத்யே வராஹம் ச பர்வதே ரகுனந்தனம்
கமனே வாமனம் சைவ ஸர்வகாலேஷு மாதவம் ॥
ஷோடசேதானி நாமானி ப்ராதருத்தாய ய: படேத்
ஸர்வபாப வினிர்முக்தோ விஷ்ணுலோகே மஹீயதே ॥

(ஸ்ரீ விஷ்ணோ: ஷோடச நாமானி)

ஷண்முகபதயே நமோ நம: ஷண்மத பதயே நமோ நம:
ஷட்க்ரீவ பதயே நமோ நம: ஷட்க்ரீட பதயே நமோ நம:
ஷட் கோண பதயே நமோ நம: ஷட்கோச பதயே நமோ நம:
நவ நிதி பதயே நமோ நம: சுப நிதி பதயே நமோ நம:
நரபதி பதயே நமோ நம: ஸுரபதி பதயே நமோ நம:
நடச்சிவ பதயே நமோ நம: ஷடக்ஷர பதயே நமோ நம:
கவிராஜ பதயே நமோ நம; தபராஜ பதயே நமோ நம:
இஹபர பதயே நமோ நம; புகழ்முனி பதயே நமோ நம:
ஜய ஜய பதயே நமோ நம: நய நய பதயே நமோ நம:

மஞ்சுளபதயே நமோ நம: குஞ்சரீபதயே நமோ நம:

வல்லீ பதயே நமோ நம: மல்ல பதயே நமோ நம:

அஸ்த்ர பதயே நமோ நம; சஸ்த்ர பதயே நமோ நம;

ஷஷ்டீ பதயே நமோ நம; இஷ்டி பதயே நமோ நம:

அபேத பதயே நமோ நம; ஸுபோத பதயே நமோ நம;

வ்யூஹ பதயே நமோ நம: மயூர பதயே நமோ நம:

பூதபதயே நமோ நம: வேதபதயே நமோ நம;

புராண பதயே நமோ நம: ப்ராண பதயே நமோ நம:

பக்த பதயே நமோ நம: முக்தபதயே நமோ நம:

அகார பதயே நமோ நம; உகார பதயே நமோ நம:

மகார பதயே நமோ நம: விகாஸ பதயே நமோ நம;

ஆதி பதயே நமோ நம: பூத பதயே நமோ நம;

அமார பதயே நமோ நம: குமரா பதயே நமோ நம;

(குமாரஸ்தவம் பாம்பன் ஸ்வாமிகள்)

★★★

॥ ஸ்ரீ: ॥
இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.
பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை
Typeing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி
எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.
க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்
எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.
(Transliteration in all Languages done here.)
Grantham to Devanagiri, Grantham to Tamil,
மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்
உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்
அச்சிட்டு தரப்படும்.
Contact : V.K.N. Enterprises (Printer)
Mylapore, Chenani-600 004, Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# த்ரிபுரஸுந்தரீ வேத பாதஸ்தவம்



**மஹ்யம் த்ருஹ்யந்தி யே மாத:த்வத்த்யானஸக்த: சேதஸே**
**தானம்ப ஸாயகைரேபி ரவ ப்ரஹ்மத்விஷே ஜஹி ॥ 61**

*தாயே உனது த்யானத்தில் என் மனது ஈடுபட்டுள்ளது*
*எனக்கு யார் த்ரோகம் செய்கிறார்களோ*
*அப்ப்ரம்மத்வேஷிகளை உன் பாணங்களால் வதம் செய்.*

**த்வத்பக்தானாமம்ப சாந்தைஷணானாம் ப்ரம்மிஷ்டானாம் த்ருஷ்டிபாதேன பூத:**
**பாபீயனப்யாவ்ருத:ஸ்வர்வதூபி: சோகாதிகோ மோததே ஸ்வர்கலோகே ॥ 62**

*அம்பிகையே ஆசையற்றவர்களும் ப்ரம்மனிஷ்டர்களான உன் பக்தர்களது கடாக்ஷம் பட்டவுடன் பாபியாயிருந்தாலும் ஒருவன் புனிதனாக அப்சரஸ்கள் சூழ சோகத்தைக் கடந்து ஸ்வர்கத்தில் ஆனந்திக்கிறான்.*

**ஸந்து வித்யா ஜகத்யஸ்மின்ஸம்ஸாரப்ரமஹேதவ:**
**பஜேஹம் த்வாம் யயா வித்வான் வித்யயாம் ருதமஸ்னுதே ॥ 63**

*இவ்வுலகில் ஸம்சாரசூழலுக்குக் காரணமான வித்தைகள் இருக்கட்டும். உன்னையே நான் சேவிக்கிறேன். எந்த வித்யையால் அறிவுள்ளவர் அமுதத்தை அடைவரோ அவ்வித்யை நீயே.*

**வித்வன்முக்யைர் வித்ருமாபம்விசால ஸ்ரோணாசிஞ்சன் மேகலா கிங்கணீகம்**
**சந்த்ரோத்தமஸம் சின்மயம் வஸ்துகிஞ்சித் வித்தித்வமேதன் நிஹிதம் குஹாயாம்॥**

*பவழம் போல் காந்தி உள்ளதும் இடுப்பில் அணிந்துள்ள ஒட்யாணத்திலுள்ள சிறு மணிகள் சப்தமுள்ளதும் சந்த்ரனைத் தலையில் ஆபரணமாகக்கொண்டதும் சின்மயமான குகையில் அமைந்துள்ளதுமான ஒரு வஸ்துவாக சிறந்த வித்வான்களால் உபாஸிக்கப்படுவது நீயே.*

**ந விஸ்மராமி சின்மூர்த்திம் இக்ஷுகோதண்ட சாலினீம்**
**முதய: ஸனகப்ரேஷ்டா:த்வாமாஹு: பரமாம் கதிம் ॥ 65**

*கரும்பு வில்லோடுகூடிய சித்வடிவமான உன்னை மறக்கமாட்டேன். சனகர் போன்ற உத்தம முனிவர் உன்னையே மிகச்சிறந்த கதி என்கிறார்கள்.*

# பித்ரார்ஜிதம்

*அல்பஸ்ருதன்*

மேல் நாட்டாருக்கு நம் இலக்கிய அறிமுகம் ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் வேரூன்றியது ப்லாசி யுத்தம் நடந்தபிறகே. வாரன் ஹேஸ்டிங்க்ஸ் ஜென்ரெல் ஆனவுடன் ஆங்கில நீதிபதிகள் கொண்ட கோர்ட்கள் ஏற்பட்டன. நீதிபதிகளுக்கு தீர்ப்புசொல்ல சாஸ்த்ரங்கள் தேவையாயின. சரியான விளக்கங்கள் தேவைப்பட்டதால் ஸர் லாரென்ஸ் ஜெங்கின்ஸ் தாமே வடமொழி கற்க ஆரம்பித்தார். நூல்களை மொழிபெயர்த்தார்.

ஐரோப்பிய மொழிகளில் நீதிபதிகள் சாஸ்த்ர மொழிபெயர்ப்பில் ஈடுபட்டதுபோல் க்றிஸ்தவ பாதிரிமார்களும் தமது மதத்தை நம் நாட்டில் பரப்புவதற்கு நம் சமய நூலகளைக் கற்றனர். அப்படி ஏற்பட்டதுதான் ராயல் ஏஷியாடிக்சொசைடி ஆஃப் பெங்கால் என்பது. முதலில் இத்தாலி பாதிரிகளும், பிறகு ஜெர்மன் பாதிரிகளும் இறுதியில் ஆங்கில பாதிரிகளும் தத்தம் மொழிகளில் மகாபாரதக் கதையை மொழி பெயர்த்துள்ளனர். இக்கதை இல்லாத ஐரோப்பிய மொழியே இல்லை எனலாம். நம் நாட்டில் ரமேஷ் சந்த்ர தத்தர் பாரதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். வ்யாசரின் மூலச் செய்யுளின் கம்பீரம் இதில் தொனிக்கிறது.

நாடகங்களில் பாரதம் பிற்காலத்தில் தோன்றிய நாடக ஆசிரியர்களான காளிதாசர், பாஸர் போன்றோர் பாரதக்கதை களைத் தழுவியே நாடகம் சமைத்தனர். இதில் வரும் உபாக்யானங்களே நாடகங்களுக்கு ஊற்றுக்கண்ணாக இருந்து வந்தது. கருத்திலோ கதையிலோ எம்மாறுதலுமில்லை. வடமொழிப் புலவர்களை ஒட்டி தெலுங்கு கன்னடம் போன்ற மொழிகளிலும் இக்கிளைக்கதைகளை நாடகமாக்கியுள்ளார்கள். இக்கதைகள் சினிமாத்துறையையும் விட்டுவைக்கவில்லை. பாரதக்கதைகளை ஒட்டி பல மொழிகளில் பல திரைப்படங்கள் வந்துள்ளன என்பது எல்லாரும் அறிந்ததே.

பாரத ப்ரசங்கம் பாரதம் தோன்றியது அரண்மனையில். தனது அந்திம தசையில் தனது முன்னோரகளின் சரித்ரம் கேட்க விரும்பி பௌராணிகர் கதை சொன்னார் என்பது மரபு. யாக சாலையில் சொல்லப்பட்ட கதைக்குப் புதுப்புது பதிப்புகள் வந்தன என்று பார்த்தோம். இடைக்காலத்தில் கோயில்களிலும் மடங்களிலும் பாரதம் வாசிப்பது வழக்கமாயிற்று. உயர்ந்த ஆசனத்தில் பௌராணிகர் வீற்றிருக்க கீழே குத்துவிளக்கின் கீழ் ஏடு படிப்பவர் (கை ஏட்டுத்தம்பிரான்) இசையுடன் ஏடு வாசித்து நிறுத்தவும்

பொராணிகர் பொருள் கூறவும் மக்கள் அனைவரும் கேட்டு இன்புறுவர். இன்றைய வழக்கங்கள் தமிழ் நாட்டில் ஒவ்வொரு க்ராமத்திலும் தர்மராஜா கோவில் ஒன்று இருக்கும். அதற்கு எதிரே பந்தல் போட்டு ஆண்டுதோறும் பாரதம் படிப்பார்கள். இரவில் கூத்து அங்கே நடக்கும். அருச்சுனன் தபஸ், பதினெட்டாம் நாள் போர், முதலிய கட்டம்களில் ஒரு பனை மரத்தை நட்டு உச்சாணியில் அர்ஜுனன் தவம் செய்வதும் துர்யோதனன் போல் மண்ணால் உருவம் செய்து அதன் மீது த்ரோபதை வேஷக்காரி குருதி நனந்த கூந்தல் முடிவதும்இன்றும் நிகழ்கின்றன.

மறு நாள் கூத்துக்காரர் அனைவரும் மஞ்சள் ஆடை அணிந்து நெருப்பு மிதித்து மஞ்சள் நீர் ஆடுவதும் இன்றும் உள்ளதே. கடவுளுக்குக் கோவில் கேள்வி பட்டுள்ளோம். ராஜாவுக்கா கோவில்என்று கேட்டால் தர்மராஜவைப்போல் த்ரோபதைபோல் கடவுளரிலும் காணமுடியுமா? இதுதான் அவர்கள் பதில். அமர காவியம் பன்மொழிபுலவர்கள் அராய்ச்சியாளர்கள் இந்த பரதத்தை காவ்யத்தை சிறப்பித்து கூறியிருக்கிறார்கள். பாரதத்தின் பெருமையும் அன்னாட்டு மக்களின்பெருமையும் இதில் பின்னிக் கிடக்கிறது. வேதபொக்கிஷத்திற்குப்பிறகு பாரதமே அடுத்த பொக்கிஷம். பண்டைய இந்தியாவின் சமயம் வரலாறு, புராணம் தத்துவம் வழக்கு நூல் சமூகமரபுகள், பொருளாதாரம் இவற்றிற்கு ஆராய்ச்சி நூலாகவே உள்ளது. இந்தியாவின் மக்களை ஒரு பிண்டமாக நினைத்தால் அதற்கு மூச்சுக்காற்றாக உள்ளது இது.

இதுதான் இந்தியாவின் தேசீய சரித்ரம். இந்திய மக்களும் பண்பாடும் உள்ளவரை அமரகாவியமாய் இதுவும் திகழும்.

"ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.
1.வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2.ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3.ஆஹ்னிககாண்டம் உத்தரபாகம் , 4.ஆசௌசகாண்டம், 5.ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6.ஸ்ராத்தகாண்டம் உத்தரபாகம், 7.திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்தகாண்டமும் என்ற 7 பாகங்கள்சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப்பெறுகின்றது.ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500
கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்
9600543996,7904244054, 9003845456,9710765203

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

ஜய ஹே குருராஜேதி ஜய ஹே பீம இத்யுத
புருஷாணாம் ஸுவிபுலா: ப்ராணாதாச்ஸஹஸோத்திதா: ।। 126

குரு ராஜனே உனக்கு ஜயம், ஹே பீமனே உனக்கு ஜயம் இப்படி மக்களின் குரல் ஓங்கி எழுந்தது.

ததோ ரங்காங்கணகதோ த்ரோணோ வசனமப்ரவீத்
யா மே புத்ராத்ப்ரியதரஸ்ய பார்தோ த்ருஸ்யதாமிதி ।। 127

அரங்கத்தின் நடுவில் வந்த த்ரோணர் என் புத்ரனைவிட எனக்குப் ப்ரியமானவனன அர்ஜுனனைப் பாருங்கள் என்றார்.

ஆசார்யவசனேன அதக்ருதஸ்வஸ்த்யயனோ யுவா
கான்சனம் கவசம் பிப்ரத் ப்ரத்யட்ருஸ்யத் பால்குன:
ததச்சர்வஸ்ய ரங்கஸ்ய ஸமுத்பிஞ்சலகோஅபவத் ।। 128

ஆசார்யரின் வசனத்தை ஏற்று தனக் கவசம் அணிந்த அர்ஜுனன் அங்கு தோன்றினான்.அங்கே அப்போது ஆரவாரம் எழுந்தது.

ஏஷ குந்தீஸுதஸ்ரீமான் ஏஷ மத்யபாண்டவ:
ஏஷோ அஸ்த்ரவிதுஷாம் ஸ்ரேஷ்ட:ஏஷ தர்மப்ருதாம் வர:
இத்யேவம் துமுலா வாசசுஸ்ருவு: ப்ரேக்ஷகேரிதா: ।। 129

இவன் குந்தீபுத்ரன், பாண்டவர்களில் மத்யமபுத்ரன்,அஸ்த்ர வித்தையில் தேர்ந்தவன், தர்மத்தில் சிறந்தவன். இப்படி பார்வை யாளர்கள் மத்தியில் பேச்சு நிகழ்ந்தது.

தர்சயாமாஸ பீபத்ஸுராசார்யாய அஸ்த்ரலாகவம் ।। 130

ஆசார்யனுக்கு அப்போது அர்ஜுனன் தன்போர் வித்தைகளைக் காண்பித்தான்.

ததஸ்ஸமாப்தபூயிஷ்டே தஸ்மின் கர்மணி (பாரத)
ஸஹஜம் கவசம் பிப்ரத் குண்ட்லோத்யோதிதானன:

விவேச ரங்கம் விஸ்தீர்ணம் கர்ண;பரபுரனஜ்ய:
ஸதனுர்பத்த நிஸ்த்ரிம்ச: பாதசாரீவ பர்வத; ।। 131

அர்ஜுனனின் வீரவியளையாட்டுகள் முடிந்தபோது கவசகுண்டலத்துடன் பிறந்த கர்ணன் தனுஷ்பாணியாய், கத்தியுடையவனாய் வீரத்துடன் ரங்கத்தில் நுழைந்தான்.

ச நிரீக்ஷ்ய மஹாபாஹுச்ஸர்வதோ ரங்கமண்டலம்
ப்ரணாமம் த்ரோணக்ருபயோர்னாத்யாத்ருதமிவாகரோத் ।। 132

அவன் த்ரோணரையும் க்ருபரையும் பார்க்காதவன்போல் மற்றவர்களுக்கு நமஸ்காரம் செய்தான்.

ஸ ஸமாஜஜனஸ்ஸர்வோ நிச்சலஸ்திரலோசன:
கோ அயமித்யாகதக்ஷோப: கௌதூஹபரோ அபவத் ।। 133

அரங்கத்தில் அனைவரும் இவன் யார் என்று குதூஹலம்அடைந்தவர்களாய் வைத்தகண் மாறாமல் இருந்தனர்.

ஸோ அப்ரவீத் மேககம்பீரஸ்வரேண வததாம் வர:
பார்த:யத்தே க்ருதம் விசேஷவதஹம் தத:
க்ரிஷ்யே பஸ்யதாம் ந்ருணாம் மா ஆத்மனா விஸ்மயம் கம: ।। 134

ஹே அர்ஜுனா நீ செய்ததைவிட நான் நன்றாகச் செய்வேன். வீண்பெருமை வேண்டாம் என்று மேகம்போல் உரைத்தான்.

அஸமாப்தே ததஸ்தஸ்ய வசனே (வததாம் வர)
யந்த்ரோக்ஷிப்த இவோத்தஸ்தௌ க்ஷிப்ரம் வைஸர்வதோ ஜன; ।। 135

அவன் சொல்லிமுடிக்கவும் ஜனங்கள் யந்த்ரத்திலிருந்து விடுபட்டார் போல் எழுந்தனர்.

ப்ரீதிச்ச (மனுஷவ்யாக்ர) துர்யோதனமபாவிசத்
ஹ்ரீச்ச க்ரோதச்ச பீபத்சம் க்ஷணனான்விவேச ஹ ।। 136

துர்யோதனனுக்கு மகிழ்ச்சியும், அர்ஜுனக்கு வெட்கமும், கோபமும் அச்சமும் உண்டாயின.

ததோ த்ரோணாப்யனுக்யாத: கர்ண: ப்ரியரணஸ்ஸதா
யத்க்ருதம் தத்ர பார்தேன தச்சகார மஹாபல: ।। 137
த்ரோணரால் அனுமதிக்கப்பட்டு கர்ணனும் பார்தன் எதைச்செய்தானோ அதையே செய்து காட்டினான்.

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# பாப புண்யங்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி...

புண்யத்தின் ப்ரயோஜனம் கஷ்டம் இல்லாமல் ஸௌக்கியமாக இருப்பது. அந்த ப்ரயோஜனத்தைதான் எல்லோரும் விரும்புகிறார்கள். அதனால் மனம் சாந்தத்தை அடைகிறது. ஆனந்தம் உண்டாகிறத. நமக்குப் புண்யத்தின் ப்ரயோஜனத்தில் ஆசை இருக்கிறதே ஒழிய, நாம் பண்ணுதில் பெரும்பாலானவைகள் பாப காரியங்களாகவே இருக்கின்றன. நாம் பாபம் பண்ணுவதற்கு நம் மனமே ஸாக்ஷியாக இருக்கிறது. புண்யம் பண்ணுகிற விஷயத்தில் சோம்பல் உண்டாகிறது.

பாபத்தின் பலன் கஷ்டம். இது செய்யக்கூடாதென்று நம் மனச்சாக்ஷி தடுக்கும் கார்யங்கள் பாபகாரியங்கள். இது செய்ய வேண்டாமென்று எண்ணுவதுண்டு; ஆனால் செய்வதை விடுவதில்லை.

இந்த லோகத்தில் பிறந்த யாவர்க்கும் ஸிகத்தில் இச்சை உண்டு. புண்யமே செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள். பாபமே செய்யக்கூடாதென்பதும் தெரியும். ஆனால் அவர்கள் செய்வதில் நூற்றுக்கு எண்பது பங்கு பாபம்தான்; இருபது பங்கே புண்யம். இதை நினைத்தால் நிரம்ப வேடிக்கையாக இருக்கிறது. பாபம் வேண்டுமென்று நாம் ஆசைப்படுவதே இல்லை. ஆனாலும் பாப மூட்டை மேலும் மேலும் ஏறிக்கொண்டே இருக்கிறது. இந்த ஆச்சர்யத்தின் காரணம் தெரியவில்லை. ஏன் இப்படி? ஏன்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. பல காலத்திற்கு முன்பே அர்ச்சுனன் நம் அனைவருக்கும் சேர்த்துப் பகவானை கேட்டு இதற்குப் பதில் வாங்கி வைத்திருக்கிறான்.

அத கேன ப்ரயுக்தோ ’யம் பாபம் சரதி பூருஷ:<br>
அனிச்சன்ன் அபி வார்ஷ்ணேய பலாத் இவ நியோஜித: (கீதை 3-36)

‘‘மனிதன் பாபம் செய்கிறான். அவனுக்கு அதைச் செய்ய ஆசை இல்லாதபொழுதே அவன் செய்கிறான். அவனைப் பாபம் பண்ண வைக்கிறது யார்? உபத்ரவப்படுத்திப் பாபம் செய்யச் சொல்கிற அந்தப் பேர்வழி யார்? பாபம் பண்ணவேண்டாம் என்று தான் ஞாபகம்; பாபத்திற்கு கொஞ்சங்கூட இச்சை இல்லை. ஆனாலும் அவனை பாபம் பண்ண வைக்கும் ஆஸாமி யார்?’’ என்று கேட்டான் அர்ச்சுனன். பகவான் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோ-குண-ஸமுத்பவ:
மஹாஷனோ மஹா-பாப்மா வித்த்யேனம் இஹ வைரிணம் (கீதை 3-37)

மனிதனுக்கு ஒரு வஸ்து வேண்டுமென்ற ஆசை இருக்கிறது, அதை அடைய ப்ரயத்னம் செய்கிறான். நியாயமான வழியில் அகப்படாவிட்டால் அந்யாய வழியில் முயற்சி செய்கிறான். அது தான் பாபம். அந்தப் பாபத்திற்குக் காரணமாக இருப்பது வேண்டும் என்னும் ஆசை. அதைத் தான் காமம் என்று சொல்லுவார்கள். அது நமக்கு ஒரு சத்ரு. மற்றொன்று இருக்கிறது அது க்ரோதம்--கோபம். ஒரு வஸ்துவின் மேல் ஆசைப்பட்டால் அது கிடைக்காதபொழுது அதற்குத் தடையாக இருந்தவர்கள் மேல் க்ரோதம் உண்டாகிறது. ஆசைப்பட்ட பொருள் கிடைக்காத பொழுது கோபம் உண்டாகிறது. காமம் திருப்பப்பட்டபொழுது கோபமாகிறது. ஆதலால் இரண்டையும் ஒன்றென்றே சொல்லிவிடலாம்.

ஒரு சமயம் காமமாக இருப்பதே பின்பு கோபமாக ஆகிறது. ரப்பர் பந்தை சுவர் மேல் எறிகிறோம். எறிந்தபொழுது அது பின்பு திரும்பி வருகிறது. எறியப்படும்பொழுது அது காமம் போல் இருக்கிறது. திரும்பிவருவதைப் போன்றது க்ரோதம். காமம் நிறைவேறாவிட்டால் கோபம் உண்டாகிறது. காமம் எதனாலும் திருப்தி அடையாது. எவ்வளவு சாப்பிட்டாலும் அதற்குப் போதாது. நாம் பசிக்கு ஆகாரம் கொடுத்தால் திருப்தி உண்டாகிறது. ஆசை, ஆசைப்படும் வஸ்துவைக் கொடுத்தால் அடங்குவதில்லை. அந்த வஸ்து கிடைத்துவிட்டதே என்று சமனம் அடைவதில்லை. காமம் நெருப்புப் போன்றது. நெருப்பு ஆகாரம் கொடுக்கக் கொடுக்க பரவிப் பெருகும். அதைப் போன்றதே காமமும். ஆகாரம் போட்டுச் சமனம் உண்டாக்குதல் நெருப்புக்கும் இல்லை. நெருப்புக்கு க்ஷண வர்த்மா என்று ஒரு பெயர் இருக்கிறது. அதற்குப் போனவழியெல்லாம் கறுப்பை உண்டுபண்ணுவது என்பது அர்த்தம். நெருப்பு எங்கே போனாலும் பின்னால் கரியை உண்டாக்கிக்கொண்டே போகிறது. காமமும் அப்படித் தான். முதலில் சந்தோஷம் உண்டாகிறது. ஆகாரம் கொடுக்கக் கொடுக்கக் காமம் விரிகிறது. காமம் ஒரு பெரும் பசிக்காரம்; மஹாசநன் என்று கூறப்படும்.

க்ரோதம், காமம் நிறைவேறாமல் திரும்பி வரும்பொழுது ஏற்படுவது. அது காமத்திலும் உயர்ந்தது. இது நைஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கலி வருகிறார். அவருடைய ஸேனாதிபதிகளாகிய காமன், க்ரோதன் முதலியவர்கள் உடன் வருகிறார்கள். ஸ்துதி பாடகர்கள் ஒவ்வொரு ஸேனாதிபதியின் பெருமையையும் எடுத்துச் சொல்லுகிறார்கள். க்ரோதனைப் பற்றியும் சொல்லப்படுகிறது.

(தொடரும்)